# சுதந்திரக் கிராமம்

DR. U.V. SWAM... TIRUVANMIYUR ... MA...

E.P.I.C

I PRODUCE. I DEFEND

சங்கு கணேசன் (C 194?)

# சுதந்திரக் கிராமம்


எழுதியவர் :

எம். சத்தியநாராயண சாஸ்திரி

மொழிபெயர்த்தவர் :

கே. எஸ். ஜம்புநாதன்


விலை அணா 0-12-0


PUBLISHED BY

**SANGU GANESAN**

ORGANISING SECRETARY

THE E. P. I. C. CENTRE

PICHIWAKKAM, - VALATHOOR POST

SRIPERUMBADOOR, CHENGALEPUT DT.

கிடைக்குமிடம் :

சுதந்திரச் சங்கு காரியாலயம்

திருவல்லிக்கேணி, சென்னை.

1947.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சுதந்திரக் கிராமம் | — | 1 |
| தீர்க்க திருஷ்டி | — | 5 |
| போட்டியும் கூட்டுறவும் | — | 8 |
| சிறுபான்மைப் பூச்சாண்டி | — | 9 |
| உரிமையும் கடமையும் | — | 10 |
| சக்தியும் பிரிவும் | — | 11 |
| ஜாதித் திமிர் | — | 13 |
| அடிமைத் தளை | — | 15 |
| சுயதேவைத் திட்டத்திற்கு டார்பிடோ | — | 17 |
| பிரித்தாளும் சூழ்ச்சி | — | 20 |
| சோம்பலும் சுபிக்ஷமும் | — | 21 |
| ரயத்வாரி முறை | — | 23 |
| இனி நாம் என்ன செய்யவேண்டும் | — | 25 |
| பொதுவுடமை | — | 27 |
| சுயதேவைத் திட்டம் | — | 30 |
| சுதந்திரத்திற்கு வழி | — | 34 |
| கிராம சபை | — | 34 |
| சுயதேவை | — | 35 |
| பொதுச் சொத்து | — | 36 |
| வரியும் பங்கீடும் | — | 37 |
| சட்ட திட்டங்கள் | — | 40 |
| கல்வி | — | 41 |
| நகரங்கள் | — | 42 |
| செலாவணி | — | 43 |
| ஸ்திரீகளின் அந்தஸ்து | — | 44 |
| உலக சமாதானம் | — | 44 |

# படித்துப் பாருங்கள்!

காந்திஜி நமக்கு வழிகாட்ட முன் வந்ததிலிருந்து நமது பயம் தெளிந்தது. தேசத்திற்காகவும், பிறருக்காகவும் தியாகம் செய்யவேண்டும், சத்தியமான வாழ்க்கை நடத்தவேண்டும் என்ற அபிலாஷை வேரூன்றிற்று. தேசம் விடுதலையடைய காந்திஜி நமக்குப் புது வழி காட்டிவருகிறார்.

'வந்தே மாதரம்' என்று சொல்லக்கூட, நாம் ஒரு காலத்தில் பயந்து செத்தோம். அதைக் கண்டு சர்க்காரும் நடவடிக்கை எடுத்துத் தண்டித்தது. ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. பிரிட்டிஷார் நம்முடைய போராட்டத்தின் சக்தியை அறிந்து கொண்டுவிட்டார்கள்.

இன்று நமது பிரதிநிதிகள் மாகாணங்களிலும் மத்ய சர்க்காரிலும் பதவி ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் சர்க்காரைப்போலவே, அவர்கள் வகுத்து வைத்த சட்டப்படி அரசாங்கம் நடத்த நமது தலைவர்கள் விரும்பவில்லை. ஏழைகள், கிராமவாசிகள், சாதாரண ஜனங்கள் ஆகியவர்கள் சௌக்கியமாக வாழ வேண்டும் என்று விரும்புகிறார்கள். எல்லாரும் வயிறாறச் சாப்பிட்டு உடம்பு நிறைய ஆடை உடுத்திக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறார்கள். நம்முடைய தேவைக்கு வேண்டிய துணிமணியை நாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும், அதுவும் நம்முடைய கிராமத்திலேயே தயாரித்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் காந்திஜியின் விருப்பம்.

நமது மானம் மறைக்கப் பிறர் கையை எதிர் பார்த்துக் கொண்டு நிற்கக்கூடாது என்று சொல்லி, சொந்தமாக ஆடை

தயாரித்துக் கொள்ள காந்திஜி கைராட்டினத்துக்குப் புத்துயிர் கொடுத்து கதர் உற்பத்தியை வற்புறுத்துகிறார். அதே போல மற்ற அம்சங்களிலும் சுய தேவையைப் பூர்த்தி செய்து கொண்டு வாழவேண்டும் என்று சொல்கிறார். கட்டத் துணியும் தின்னச்சோறும் எல்லாருக்கும் திருப்தியாகக் கிடைக்கவேண்டும். அதற்காக ஒவ்வொரு கிராமமும் வேலை செய்யவேண்டும்.

ஆனால் இன்று கிராமங்களின் நிலைமை வேறாக இருக்கிறது. அதிகமாகக் காசு கிடைக்கிறது என்னும் ஆசையினால் கிராமவாசிகள், கரும்பு, பருத்தி, மணிலாக்கொட்டை முதலியன பயிரிடுவதில் கவனம் செலுத்துகிறார்கள். எங்கோ இருக்கும் ஆலை முதலாளியின் தேவைக்காக, வியாபாரியின் லாபத்திற்காக, நாம் பாடுபடக் கூடாது. நம்முடைய தேவைகள் பூர்த்தியான பின்பு அதிக மிருப்பதை ஏற்றுமதி செய்ய வேண்டும்.

இதற்கு கிராம ஜனங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். தங்களுடைய ஆகாரத்திற்குத் தேவையான தானியத்தை உற்பத்தி செய்து கொண்டு உபரியாக இருக்கும் நிலத்தில் மற்ற விவசாயம் செய்ய கிராம ஜனங்கள் நிச்சயித்துக் கொள்ளவேண்டும். கிராம ஜனங்களின் தேவையைக் குறிப்பிட்டு உற்பத்தி செய்யவும், பொதுஜன ஒற்றுமையும் அமைதியும் ஏற்படவும், மற்றக் கிராமங்களுடன் வியாபாரத் தொடர்பும் அரசாங்கத்துடன் தொடர்பும் இருக்கவும் முன் காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்து சபைகள் இருந்தன. ஒவ்வொரு கிராமமும் ஒரு தனி அரசாங்கம் போலவே அமைந்து வாழ்ந்துவந்தது. அதனால்தான் நாட்டில் சுபிக்ஷமும் நமது நாகரிகமும் நீடித்திருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பின்பு, இந்தப் பஞ்சாயத்து சபைகள் கலைக்கப்பட்டுவிட்டன. பிரிட்டிஷார், நாட்டுக் கைத்தொழில்கள் சிலவற்றுடன் போட்டியிட்டு நசுக்கினார்கள். சீமையிலுள்ள ஆலைத்துணி இங்கு விற்பனையாகவேண்டும் என்று நூற்பவர்களை ஹிம்ஸித்தனர். தறிக்கு வரி போட்டனர். அயல் நாட்டு வியாபாரியின் சௌகரியத்தில் கண்ணும் கருத்துமாக சர்க்கார் இருந்ததால் நமது தொழில் க்ஷீணித்

தது. கடைசியில் நமது தேவைகளைப் பற்றி எண்ண முடியாமல் அந்நிய நாட்டு வியாபாரத்திற்கு வேண்டிய மாதிரி விவசாயம் செய்ய வேண்டியதாயிற்று.

காந்திஜியின் போதனையினாலும் உழைப்பினாலும் நாம் மகத்தான தியாகம் செய்து இன்று நாட்டிற்கு ஒரு சுதந்தரத் திட்டம் வகுக்கவும் துணிந்து விட்டோம். இப்போது நாட்டின் தலைவர்கள் டெல்லியில் சுதந்தர இந்தியாவுக்கு ஒரு அரசியல் திட்டம் வகுக்கக் கூடியிருக்கிறார்கள். இந்தியா விவசாய நாடு. கிராமங்கள் நிறைந்த தேசம். கிராமங்கள் சுபிக்ஷமாகவும் சுதந்தரமாகவு மிருந்தால்தான் நாடும் சுதந்தரமாக வாழமுடியும். காந்திஜி நமது நாட்டின் க்ஷேமம் கிராமங்களில் தானிருக்கிறது என்கிறார். தனி நபர் முன்னேற்ற மடையாவிட்டால் சமூகமும் முன்னேற்ற மடையாது. கிராம சுயராஜ்ய மில்லாவிட்டால் தேச சுயராஜ்யமும் இல்லை.

பழய காலத்துப் பஞ்சாயத்து முறை மிகவும் சிறந்தது என்று ராஷ்டிரபதி கிருபாளினியும், சோஷலிஸ்டுத் தலைவர் ஜயப்பிரகாஷ் நாராயணனும், சொல்கிறார்கள். அந்த முறையைத் தழுவித்தான் நண்பர் ஸ்ரீ சத்யநாராயண சாஸ்திரி இந்தத் திட்டத்தை வகுத்திருக்கிறார்.

நமது மாகாண சர்க்காரும், கிராம முன்னேற்றத்தில் கவனம் செலுத்தி, கிராம சபைகளை அமைத்து வருகிறது. இந்தக் கிராம சபை களுக்குச் சில விசேஷ அதிகாரங்களும் வழங்கியிருக்கிறது. இதே கிராம சபைகள் நன்றாக வேலை செய்தால் இவற்றையே கிராமப் பஞ்சாயத்துகளாகத் திருத்தியமைத்துவிட முடியும்.

இன்று நாம் பரிசீலனைக் கட்டத்தில்தான் இருக்கிறோம். பழைய முறை சிறந்தது என்பது, நமக்குத் தெரிகிறது. காலத்தை யொட்டி நாம் அந்த முறையில் சில மாறுதல்களைச் செய்து கிராம அரசியல் ஒன்றை வகுத்துக் கொள்ளவேண்டும். நண்பர் சத்ய நாராயண சாஸ்திரியின திட்டம் சிந்தனை செய்து பார்க்கக் கூடியது. நமது மாகாணத்தில் சில இடங்களிலாவது இந்தத் திட்டத்தை அமலுக்கு கொண்டுவந்து பார்த்தால் அனுபவ சாத்தியமாக இதிலுள்ள லாப நஷ்டங்கள் தெரியும். ஒரு நிரந்தர அரசியல் திட்டம் வகுக்கப்படும்போது நமது அனுபவங்கள் மிகவும் உதவியாக இருக்கும்.

இந்தப் புத்தகத்தை வியாபார நோக்கத்துடன் மட்டும் மொழி பெயர்க்கப்படவில்லை. தமிழ் நாட்டிலுள்ள சில கிராமங்களிலாவது இந்தத்திட்டம் பரிட்சிக்கப்படவேண்டும என்பது தான் பிரதான ஆசை. இதை நடைமுறையில் வேலை செய்து பார்க்க செங்கல்பட்டு ஜில்லாவில் பிச்சிவாக்கம் கிராமத்தைத் தேர்ந்து எடுத்துப் பூர்வாங்க வேலை செய்து கொண்டு வருகிறோம். ஆந்திர நாட்டிலும் சில நண்பர்கள் இந்தத் திட்டத்தை நடத்திப் பார்ப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இன்னும் சில இடங்களில் இந்தத் திட்டம் பரிட்சிக்கப்படவேண்டும் என்பதே எனது ஆசை.

மொழி பெயர்ப்பைப் பற்றியும் ஒரு வார்த்தை. எழுத்துக்கு எழுத்து மொழிபெயர்க்கும் முயற்சியில்லாது, மூல நூலின் சுவை குன்றாது மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. மூல நூலிலுள்ள சர்வதேச அரசியலைப்பற்றிய ஒரு அத்தியாயம் நமக்குத் தேவையில்லை என்று மொழி பெயர்க்கப் படவில்லை.

காந்திஜி நமக்கு வழி காட்டி, அவரது அபிலாஷை நிறைவேற வேண்டுமானால் கிராமங்கள் சுபிக்ஷமடையவேண்டும், சுதந்தரமாக வாழவேண்டும், அதற்கான உழைப்பு நம்மிடம் தானிருக்கிறது.

| | |
|---|---|
| பிச்சிவாக்கம்<br>வளத்தூர் போஸ்டு<br>ஸ்ரீபெரும்புதூர் தாலூகா<br>விய-ஸு தைமீ | சங்கு . கணேசன். |

கண்ணான கண்மணியே !
    கண்ணிரண்டு முள்குழிந்து
பொன்னான மேனியெல்லாம்
    பொலிவிழந்து போனயோ !
பொல்லாத பூமியிலே
    எல்லோரும் வந்தோமடா
கொல்லாமல் கொல்லுதடா
    குவலயத்தில் பட்டினியும்
உழுதுண்டு வாழ்ந்ததற்கும்
    பழுதொன்று வந்ததடா !
முழந்துண்டு இல்லாமல்
    முட்டுங்குளிர் வாட்டுதடா !
பட்டணத்தை மோக்ஷமென்று
    பாவிநான் வந்துவிட்டேன்
ஒட்டிவயிறு சாகிறோமே
    ஒப்பலையே தெய்வத்துக்கு.

# உழவன் உரிமை

ஸ்ரீ. கி. வா. ஜகந்நாதன்

நிலத்தை உழுபவர்யார்—அதில்
நீரினைப் பாய்ச்சுவோர்யார்
புலத்தினி லேயுழுது—வேர்வைப்
புனலை வடிப்பவர்யார்?

களையை எடுத்துப்பின்னர்—புலம்
காவல்செய் தேபயிர்தான்
விளைய அறுத்துமிகக்—குவை
வேண்டிக் குவிப்பவர்யார்?

உழுது விளைத்தவரும்—பயிர்க்கு
ஊட்டம் கொடுத்தவரும்
தொழுது குவித்தவரும்—இந்தத்
தொழிலுடை நாங்களன்றோ?

மண்ணை உழுததிலே—வேர்வை
வடித்து விளைத்ததனை
உண்ண உரிமையுள்ளோர்—வேறு
ஒருவரோ இல்லைஇல்லை.

கலப்பையை ஓட்டியது—எங்கள்
கைகள் அதால்விளைந்த
புலப்பயிர் உண்ணுதற்கும்—இனிப்
பூரண உரிமைஉண்டு.

தோட்டத்தை நாம்வளர்த்தோம்—கேணி
தோண்டிநீர் பாய்ச்சிநின்றோம்
மீட்டும் அதன்கனியை—உண்ண
வேறெவர்க் குண்டுரிமை?

பூமிஎங் கட்குரிமை—பல
புலமும்எங் கட்குரிமை
தீமையில் லாதபடி—மிகத்
தேசத்தாற் பாடுபட்டோம்.

உழைத்தவர் யாவருக்கும்—இதன்
உரிமையிற் பாகம்உண்டு
அழைத்து விருந்துண்ணுவோம்—பிறர்
ஆணைக் கடங்கமாட்டோம்.

ஓடி உழைப்பதுநாம்—இருந்து
உண்பவன் வேறெவன் காண்?
கூடி விளைப்பவர்நாம்—இதிற்
குறுக்கே வருபவன்யார்.?

பாரத நாட்டினிலே—தொழிற்
பண்பினைப் போற்றிடுவோம்
வீரம் விளைத்தவர்போல்—நில
விளைவை விளைத்திடுவோம்.

பொய்யை முறியடிப்போம்—சாதிப்
பூசலை ஓட்டிடுவோம்
மெய்யினில் வேர்வைசொட்டச்—செய்யும்
வேலையைப் போற்றிடுவோம்.

கொள்ளைக் கிடம்அளியோம்—சோம்பற்
கூட்டத்தை ஓட்டிடுவோம்
வெள்ளப் பயிர்விளைக்க—உடல்
வீறும் வலிமைஉண்டு.

பட்டம் பதவியென்றால்—ஓடிப்
பணிவதிங் கில்லை இல்லை
ஒட்டும் மனசுடனே—அன்பில்
உழைப்பவரே பெரியோர்.

இந்திய மண்ணினிலே—இனி
ஏழையென் றொரும் இல்லை
விந்தை மிகுத்ததடா—இது
விளைந்திடின் சொர்க்கமடா.

# சுதந்திரக் கிராமம்

நமது சமுதாயமே கிராம அமைப்பில் எழுந்ததுதான். கிராமமும் சமுதாயமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத இரட்டைப் பொருள்கள். பண்பட்ட பழக்க வழக்கத்திலிருந்து நமது சமுதாயம் தோன்றியிருக்கிறது.

ஆதிநாளில் சமுதாயம் எப்படி அமைந்தது? ஜீவராசிகளில் பகவான் இரண்டு ரகமான பிராணிகளை உற்பத்தி செய்திருக்கிறான். கூடி வாழும் சால்புடையன சில, தனித்து வாழும் குணமுடையன சில என இரண்டு பெரும் பிரிவுகளாக பிராணிகளைப் பிரிக்கலாம். சிங்கமும் புலியும் குகைகளில் வசித்து, வேட்டையாடித் தனித்து வாழும் குணமுடையவை. ஆடு, மான், ஓநாய் முதலிய பிராணிகள் கூட்டம் கூட்டமாக கூடி வசிக்கும் பழக்கமுள்ளவை. கூடி வாழும் சால்புணர்ச்சிதான் சிறந்தது. மனிதனும் அந்தப் பண்பு பெற்று பரஸ்பரம் உதவி செய்து, பலுகிப்பெருகி வாழ ஆரம்பித்தான்.

கூடி வாழும் பண்பு மனிதனிடம் ஸ்திரப்பட ஸ்திரப்பட அவனது சக்தியும் அதிகரித்தது. இன்னல்களை எதிர்த்து நிற்கும் ஆற்றல் அளித்தது. இயற்கையைக் கட்டுப்படுத்தவும், மிருகங்களை அடக்கி வாழவும் கூடி வாழும் சக்திதான் அவனுக்கு உபபலமாக நின்றது. பிரிந்து விலகி தனித்தனியாகி, நசித்து விடாது காத்து நிற்கும் இந்த உணர்ச்சிக்குத்தான் பின்பு 'தர்மம்' என்ற பெயர் கிடைத்தது. எல்லா மனிதர்களையும் ஒற்றுமைப் படுத்தல் என்னும் அர்த்தம் தொனிக்கும் வடமொழிச் சொல்தான் தர்மம்.

காலக்கிரமத்தில் மனித சமுதாயத்தைப் பிணைத்து நிற்கும் இந்த தர்மம் என்னும் சொல்லுக்கு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு [மனித அறிவின் வளர்ச்சிக் கொப்ப] வியாக்யானங்களும் மாறி வந்தது. நிரந்தரமான நியதிகளை வரையறுக்கும் நோக்கம் நமது பெரியோர்களுக்கு ஏற்படவில்லை. சமுதாய அமைப்பிற்கேற்ப அடிப்படையில், மாறுதலின்றி சூழ்நிலை, காலம் இவற்றால் ஏற்படும் மாறுதல்களுக்கு இடம் வைத்தே அவர்கள் சில

நியதிகளை வரையறுத்தார்கள். இல்லாவிட்டால் ஹிந்து தர்மம் என்றோ சிதைந்திருக்கும்.

சமூக வாழ்விற் கேற்ப சட்ட திட்டங்களிலும் மாறுதல் தோன்றுவது அவசியம். ஆனால் நமது சனாதனிகள் காலத்துடன் வாழாது பழைய சம்பிரதாயங்களில் மோஹம் கொண்டு பிற்போக்காளர்களாக இருக்கிறார்கள். விதவா விவாகம், தீண்டாமை இம்மாதிரி சமூகச் சிக்கல்களில் அவர்கள் காட்டும் மனப்பான்மை சமூக வளர்ச்சிக்கே முட்டுக் கட்டையாக இருக்கிறது. சமுதாய வளர்ச்சியில் காலமும் காலப்போக்கும் முக்கியமானது என்பதை சனாதனிகள் எண்ணவில்லை. ஆதிகாலத்திலிருந்தே நமது சமுதாயம் பண்பட்டு வளர்ந்திருக்கிறது. நமது முன்னோர்கள் அடிக்கடி தர்மஞான சபைகள் என்ற அரசியல் சபைகளைக் கூட்டி சமூக சட்ட திட்டங்களை திருத்தியமைத்திருக்கிறார்கள். அதனால் நமது சமுதாயம் பின்னப்படாது வலுவுற்றுப் பெருகிற்று.

ஆனால் இன்று! சமுதாய அமைப்பை பழங்கதை என்று சொல்லி விட்டது அந்நிய நாட்டுப் படை எடுப்பு. நாம் பலமிழந்து வீழ்ந்து அன்னிய ஆட்சியை ஏற்றுக் கொண்டோம்! நமது சமுதாயப் பிரச்னைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள சட்ட திட்டங்களை வரையறுத்துக் கொள்ளும் தெம்பும் திராணியும் இழந்து விட்டோம். பழங்காலத்துச் சாஸ்திரங்களை, நமது முன்னோர்கள் வகுத்த சட்ட திட்டங்களை, மாற்றியமைப்பது பாவம் என்று கருத ஆரம்பித்து விட்டோம். நமது பலம் ஒடுங்கி விட்டதால் துணிவில்லை. இதனால் இன்று உலகத்துடன் சரி சமானமாக வாழும் சக்தியும் அற்று, பழைய சமுதாயத்தைப் போல வாழும் தெம்பு மற்று நிற்கிறோம். இதே ரீதியில் நாம் இருந்து கொண்டிருந்தால் நமது சமுதாயம் இன்று வீழ்ந்து விடும். அரசியலில் நாம் அடிமைகள் என்பது ஒருபுறமிருக்கட்டும். சமுதாய வளர்ச்சியில் நாம் புதுமுறை காண வேண்டும்.

நமது சமுதாயம் தோன்றியதே ஒருகதை. கூடிவாழும் இயல்புடைய மனிதன் தான், தனது குடும்பம், ஆடுமாடுகள் என்று ஒரு குழு ஏற்பட்டது. இப்படிப் பல குடும்பங்கள் சேர்ந்து கூடி வாழ்ந்தனர். உணவிற்காகவும் ஆடுமாடுகளை மேய்ப்பதற்கும் அவர்கள் இடம் விட்டு இடம் சென்று வாழ ஆரம்பித்தார்கள். புது இடங்களில் நேரும் ஆபத்துகளை எதிர்த்து பரஸ்

பரம் உதவி செய்ய அவர்கள் கூட்டம் கூட்டமாகவே வாழ்ந்து பின்பு வளமான இடங்களில் குடியேறி ஸ்திரமாக வாழ ஆரம்பித்தனர். இன்றுகூட நம் நாட்டில் ஊர் ஊராகச் சென்று வாழும் பழங்குடிகளின் சாயையான லம்பாடிகளையும் இருளர்களையும் நாம் பார்க்கிறோம்.

தேவையும் வசதியும் பெருகி, ஒரே இடத்தில் நிரந்தரமாக உணவும் சௌகரியமும் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டதும் இந்தக் கூட்டத்தினர் ஆங்கு ஆங்கு குடியேறி வசிக்க ஆரம்பித்தனர். ஆதியில் இம்மாதிரிக்குடியிருப்புகள் நதியோரங்களிலும் இயற்கை வளம் நிரம்பிய இடங்களிலுமே ஏற்பட்டது. இவைதான் ஆரம்ப கிராமங்கள்.

உண்ண உணவு, இருக்க நிலையான வீடு, என்று ஏற்பட்ட பின்பு இதர சௌகரியங்களில்—மனிதனின் மனம் சென்றது. வேலை பெருகிற்று. ஒவ்வொருவரும் தம்தம் தேவைகளைக் கவனித்துக் கொள்வது இயலாத அளவு பெருகவே, அந்த அந்தக் கூட்டத்தினர், தமக்குள்ளே இன்ன இன்ன வேலைகளை இன்னார் செய்ய வேண்டுமெனப் பிரித்துக் கொண்டனர்.

மனிதனுடைய சொந்த சௌகரியங்களை எப்படிக் கவனிப்பது என்ற பிரச்னை அடுத்தபடியாக வந்தது. ஒவ்வொருவரும் தனித்தனியாக உணவு பொருளைத் தயாரித்துக் கொள்வதா, கூட்டத்தினர் எல்லோருக்கும் ஒரு பொது போசன விடுதியும் அதைக்கவனிக்க சிலரும் இருப்பதா என்று ஒருபிரச்னை. உடைகளை சுத்தப்படுத்துவதிலும் உணவுபாண்டங்களைக் கழுவதிலும் வேலை பெருகிற்று. கூட்டம் பெருகி, சிறுகச்சிறுக நிலையான வாழ்க்கையும்ப ஏற்படவே சுயதேவைகள் பெருகி சமுதாயத் தேவைகளாகமாறிற்று. அதன் பலனாக வண்ணான், அம்பட்டன், குயவன் என்று புதுப்புது தொழிலாளர்கள் தோன்றினர்.

நமது முன்னோர்கள் ஒவ்வொரு தொழிலையும் மிகவும் நுணுக்கமாகப் பரிசீலனை செய்துதான் பிரித்து வைத்தார்கள். வேளாண்மை, குயத்தொழில், சலவைத் தொழில்; முதலியன கவனிக்க தனித்தனிப் பிரிவுகளை ஏற்படுத்தினர். உணவிலும் உடையிலும் தம்தம் தேவைகளைத்தாமே கவனித்துக்கொள்ள வேண்டுமென திட்டம் வகுத்துவைத்தார்கள். வீட்டுக்குவேண்டிய உணவை அவரவர்கள் தயாரித்துக் கொள்வதுபோல, ஆடைகளும், தயாரித்துக்கொள்ள எல்லோரும் நூல் நூற்றலி

லும் பயிற்சி பெறவேண்டுமென திட்டம் வகுத்தனர். ஆனால் நெசவுத் தொழிலை மாத்திரம் பிரித்து ஒரு பிரிவினர் வசம் கொடுத்தனர். ஆகவே நெசவாளர் என்ற பிரிவு சமுதாயத்தில் ஏற்பட்டது. ஆனால் நூற்பவர் என்று ஏற்படவில்லை.

சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதினருக்கும் ஒவ்வொரு வேலை கொடுக்கப்படவே, நாளாவட்டத்தில் அதில் ஊன்றிக் கவனித்துப் பாடுபட்டு திறமையை ஒவ்வொருவரும் விருத்தி செய்துகொள்ள முடிந்தது. ஆனால் காலக்கிரமத்தில் இந்த சமுதாய சேவைகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வேற்றுமை களை உண்டு பண்ணி விட்டன.

சமுதாய வளர்ச்சிற்கேற்ப தொழிலைப் பிரித்துக் கொடுப் பதிலும் புதிய பிரச்னைகள் எழுந்தன. சில தொழில்கள் நாசூக் கானவை; சில அசங்கியமும் ஆபாசமும் நிறைந்தவை. மற்றும் பல வேலைகளுக்கு தேக உழைப்பு அவசியம். இதனால் மக்களி டையே பேத உணர்ச்சியும் பூசலும் ஏற்பட ஹேது விருந்தது.

ஆனால் நமது முன்னோர்களுக்கு இந்தப் பிரச்னைகள் பெரி தாகத் தோன்றவில்லை. ஐக்கியமான அமைப்பும், குடும்பம் போன்ற சமுதாயமும், ஏற்பட்டு நிரந்தர வளர்ச்சியும் வாழ்க்கை யும் காண அவாவுற்றவர்களுக்கு பொறுமையும் பொச்சரிப்பும் வளராது தடுக்க வகை தெரியாதா? தொழிலில் ஏற்றத் தாழ் வில்லை, எல்லோரும் ஓர் குலம் என்ற மூல மந்திரத்தை அவர் கள் சமூகத்தினரிடையே ஓயாது உச்சரித்து வந்தனர். சமூகக் கட்டு குலையாது வாழ ஒவ்வொருவனும் தனது தொழிலில் மனப் பூர்வமாக ஈடுபடவேண்டும் என்று பிரசாரம் செய்தனர். சுய நலத்தைவிட சமுதாய நலமே பிரதானமென்று போதித்தனர்.

சமூக சேவை, பற்றற்ற வாழ்க்கை என்ற மாய மந்திரம் அற்புதமான வேலை செய்தது. அசங்கியம், சிரமம், ஏற்றத் தாழ்வு என்ற பேதாபேதங்களிலிருந்து மனிதனைக் காப்பாற்றி அவன் மேலும் மேலும் வளர உதவின. இன்று சிறைவாசத் தையும் தடியடியையும் தேச சேவையின் பெயரால் எத்தனை ஆண்களும் பெண்களும் சந்தோஷத்துடன் வரவேற்கிறார்கள்? நமது முன்னோர்கள் சமூக சேவைக்காக பல்வேறு கடுந்தொழில் களை இன் முகத்துடன் ஏற்று வாழ்ந்ததில் என்ன ஆச்சரியம்?

ஆதிநாளில் சமுதாயம் பெருகி, சமுதாய நலனுக்காகத் தொழிலைப் பிரித்துக் கொண்டபோது ஏற்றத் தாழ்வு என்ற

பேத உணர்ச்சியே ஏற்படவில்லை. பிற்காலத்தில் ஏற்பட்ட விளைவு அது. அந்த உணர்ச்சி சமுதாயத்தில் ஏற்பட்ட அன்றே சமுதாய வீழ்ச்சியும் ஆரம்பித்தது.

## தீர்க்க திருஷ்டி

தொழிலைப் பிரித்ததும் எல்லாத் தொழில்களுக்கும் இருப்பவர்களை சமமாகப் பிரிக்காது தேவைக்கேற்ப, தொழிலுக்கு ஏற்ப ஆட்கள் நியமிக்கப்பட்டனர். உதாரணமாக நூறு பேர் கொண்ட சமுதாயத்தில் அறிவு புகட்டும் தொழிலில் இரண்டு மூன்றுபேர் இருந்தால் போதுமென நிச்சயிக்கப் பட்டது. அலங்கார அணிகலன்கள் செய்ய ஒன்றிருவர், ஆடை நெய்ய நான்குபேர், விவசாயத்திலீடுபட ஐம்பது அறுபது பேர் என்று தொழிலின் தேவைக்கேற்ப தொழிலையும் ஆட்களையும் பங்கிட்டுக் கொள்ளப்பட்டது. தொழில் பாகுபாட்டிற்காக சிருஷ்டிக்கப்பட்ட சிறு கோஷ்டிகள் பின்பு ஜாதியினர் என்ற பெயர் பெற்றனர். சமூகத்திலும் (பின்பு) ஜனத்தொகைக் கணக்கு எடுத்தபோதும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டவர் தான் அதிகம் என்றும், பிறதொழில்களில் ஈடுபட்ட பிராமணர், ஆசாரி நெசவாளர் முதலியவர் குறைவு என்றும் தெரிய வருகிறது.

ஆனால் பிற்காலத்தில் நிலைமை வேறுபட்டுவிட்டது. ஜாதி என்பது ஆண்டவன் சிருஷ்டி என்று பொய்தோற்றம் காட்டி நூறுபேர்கொண்ட சமூகத்தில் மூன்று பிராமணர்களை மட்டும் ஆண்டவன் சிருஷ்டித்தான் என்ற இடுக்கும் போட்டுப் பிரிக்க முயன்றனர் சில சுயநலவாதிகள்.

சமூகவளர்ச்சிக்கு, சுயதேவைத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தங்களுக்குள் ஒரு வர்ணாசிரம முறையைச் சிருஷ்டித்துக் கொண்ட ஹிந்து சமுதாயத்திற்கு இந்தக் கெட்டபெயர். நடுநிலைமை நோக்குடன், துவேஷத்தை மறந்து நமது ஜாதிப் பிரிவுகளை ஆராய்ந்து பார்த்தால், எவ்வளவு அழகாக, பொருளாதார சமூக நலன்களுக்காக, நமது முன்னோர்கள், திட்டம் வகுத்து இருக்கிறார்கள் என்பது புரியும். அவர்களது தீர்க்க திருஷ்டியும் அரசியல் ஞானமும் வியக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறது.

தொழிற் பிரிவினை செய்ததுடன் சமுதாய வளர்ச்சிக்குக் கட்டுப்பாடும் அவசியம் எனத்தெரிந்த நம் முன்னோர்கள் மிக

வும் நுணுக்கமாக ஆராய்ந்து ஒவ்வொரு பிரிவினரும் அனுஷ்டிக்க வேண்டிய சட்டதிட்டங்களையும் வரையறுத்தனர். ஹிந்து சமுதாயத்தில் அமைந்த இந்த அற்புதமான கட்டுப்பாட்டுதான் எத்தனையோ புது மதங்கள் தோன்றியும்கூட ஹிந்து மதத்தை அழிக்காது காப்பாற்றி வருகிறது.

மிகவும் கடுமையான சோதனை ஏற்படும்போதுகூட தனக்குக் கொடுத்த தொழிலில் சிரத்தையும் விஸ்வாசமும் காட்டி, கடமை யுணர்ந்து சமுதாயத்திற்கு சேவை செய்யும் ஆற்றலும் தைரியமும் ஒவ்வொருவனுக்கும் இந்தக் கட்டுப்பாட்டினால் ஏற்பட்டது. ஆங்கில ஆட்சியில் வாழ்ந்து வரும் நாம், போர்க் கப்பலில் தகப்பன் வாக்கையேற்று தீயில் பொசுங்கி மடிந்த கஸபியான்கா என்ற சிறுவனின் தைரியத்தை மெச்சிப் போற்றுகிறோம். நமது சமூகத்தில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு கஸபியான்கா தான். தனக்குப் பிரித்துக் கொடுத்த தொழிலை தலைமுறை தலைமுறையாக விடாது கடைப்பிடித்து எல்லாக் கஷ்டங்களையும் தாங்கி, சமுதாய வளர்ச்சிக்கு சேவை செய்து வரும் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் போற்றற் குரியவர் தான். அம்மாதிரிக் கட்டுப்பாடும் திடசித்தமும் அவர்களுக்கு இல்லாவிட்டால் சமுதாயம் நிலைகெட்டுச் சிதறி என்றோ மடிந்திருக்கும். ஒருவன் செய்யும் வேலையை மற்றொருவன் செய்வதால் குழப்பம் தான் ஏற்படும்.

ஒரு குடியானவனிடம் நாயும் கழுதையுமிருந்தது. ஒரு நாளிரவு அவன் வீட்டிற்குத் திருடன் வரவே கழுதை எஜமானனை எழுப்பும் நல்லெண்ணத்துடன் கத்திற்று. ஆனால் எஜமானன் கழுதையின் சமிக்ஞையைப் புரிந்து கொள்ளாமல், தூக்கத்தைக் கலைத்து விட்டதேயென வெகுண்டு தடியால் அதை நையப்புடைத்தான். திருடனோ அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு வெளியேறினான். இதேபோலத்தான் சமுதாய அமைப்பிலும் தொழில் மாறிச் சேவகம் செய்தால் குழப்பம் ஏற்படும்.

தொழிலில் போட்டியும் பொறாமையும் ஏற்படாதிருக்கவும், ஒவ்வொருவரும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு இடைஞ்சலின்றித் தம் தம் வேலையைச் செவ்வனே செய்யவும் (ஜாதிப்) பிரிவினை ஏற்படுத்தியதுடன் நம் முன்னோர்கள் ஒரு ஜாதியினர் வேறு ஜாதியினரின் தொழிலை ஏற்று நடத்தல் கூடாது என்றும்

கட்டுப்பாடு செய்தனர். ஆனால் பிற்காலத்தில் தொழிற்பிரிவு ஜாதிப் பிரிவு என்ற மாயத்தோற்றம் ஏற்பட்ட பின்பு நமக்குள் பாகுபாடும் பொறாமையும் ஏற்பட்டது. சூத்திரன் வேதம் பயிலக் கூடாது என்ற கட்டுப்பாடு அவன் கீழ்ச்சாதி யென்ற பேதத்தால் அல்ல. விவசாயத்தில் ஈடுபட்டுள்ள சூத்திரன், தனது தொழிலை விட்டு வேதம் படிக்க முயன்றால் உணவு உற்பத்தி குறைந்து விடாதா? அதனால் சமூகத்திற்கு நஷ்டம்தானே? அதேபோல வேதமோதும் பிராமணன் தனது தொழிலை விட்டு விட்டு நிலமும் வீடும் வாங்கிக்கொண்டு விவசாயத்தில் இறங்கி விட்டால், உபாத்திமைத் தொழில் செய்பவர் குறைந்துவிட மாட்டார்களா? அதனால் சமூகத்தின் அறிவு வளர்ச்சி குன்றி விடாதா? சமூக வளர்ச்சியும் நலனுமே பிரதானமாகக் கொண்டு நம் முன்னோர்கள் தொழிற் பிரிவும் ஜாதிப் பிரிவும் ஏற்படுத்தினார்களே தவிர அல்பநோக்கத்துடன், ஏற்றத்தாழ்வு உணர்ச்சியைப் புகட்டும் நோக்கத்துடன் அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

தொழில் முறையில் ஜீவனத்திற்காக சூத்திரன் வேதமோதுவதைத்தான் பெரியோர் வகுத்த சாத்திரம் என்னும் கட்டுப்பாடு தடுக்கிறதே தவிர அறிவு வளர்ச்சிக்காக யார் படிப்பதையும் தடுக்கவில்லை. மகாபாரதத்திலுள்ள தர்மவியாதன் என்னும் கசாப்புக் கடைக்காரன் கதையே இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

மிகவும் படித்தபிராமணன் ஒருவன் தான் அறிவாளி என்று கர்வம் கொண்டு அலைந்தான். ஆனால் அவனது அறிவு பரிபூர்ணமாக வேண்டுமானால் அவன் தர்மவியாதன் என்னும் கசாப்புக் கடைக்காரனிடமும் பாடம் கேட்க வேண்டுமென அவனது குருநாதன் சொல்லவே வேண்டா வெறுப்பாக அவன் அங்கு சென்றான்.

பிராமணன் வரும்போது, கசாப்புக் கடைக்காரன் தொழிலில் ஈடுபட்டிருந்தான். பின்பு வந்து சென்று தனது பெற்றோர்களுக்கு சிசுருஷை செய்து விட்டுத் தானும் தனது நித்ய கடன்களை முடித்துக் கொண்டு பிராமணனை அவன் வந்த காரியமென்னவென விசாரிக்க வந்தான். அங்கு நடந்தனவற்றைக் கவனித்து வந்த பிராமணனுக்கு தர்மவியாதனுடைய கடமை உணர்ச்சியும், அவனது பொறுமையும் கண்டதுமே அகங்காரம்

நீங்கிவிட்டது. அவன் தர்மவியாதனை வணங்கி தான் கற்க வேண்டியதைக் கற்று விடை பெற்றுச் சென்றான்.

நான்கு வேதங்களையும் கசட்டறக் கற்று ஆயுள் முழுவதும் வீணாக்குவதைவிட தனது கடமையைச் செய்து கொண்டே ஓய்வு நேரத்தில், வேதசாரத்தை சுலபமாக புராண காலக்ஷேபங்கள் மூலம் சூத்திரன் தெரிந்து கொள்ள முடியும். அதே போல சமூக க்ஷேமத்திற்காகப் பாடுபடும் பிராமணன் சூத்திரன் சேவையை தானியங்கள் மூலம் பெற்றுக் கொள்கிறான். இந்தப் பரஸ்பர சேவையினால் இரு சமூகத்தவரும் பயனடைய முடியும். அறிவு வளர்ச்சியிலும் வேத பாராயணம் செய்து விட்டதால் மட்டும் பிராமணன் சூத்திரனை மிஞ்சி விட்டதாக எண்ண முடியாது. வேத சாரங்களைக் கரைத்துக் குடித்து விட்டு மேற்கோள்கள் காட்டுவதால் மட்டும் பிராமணன் ஞானி என்று சொல்லிவிட முடியாது. கேள்வி ஞானத்தால் வேத சாஸ்திர விசாரம் செய்த சூத்திரனும் அவனுக்கு இணையானவன். படிப்பு மட்டும், பண்பும் சால்பும் புகட்டி விடாது. அறிவு என்பது அலாதியானது. அது அனுபவ சாத்யமாகவும் சக்வாஸத்தினாலும் ஏற்படக்கூடியது. எழுதப்படிக்கத் தெரிவதற்கும் பண்பிற்கும் சம்பந்தமேற்படுத்துவது தவறு.

## போட்டியும் கூட்டுறவும்

சமூகக் கட்டுப்பாட்டிற்காகவும் முன்னேற்றத்திற்காகவும்தான் தொழில் பிரிவு ஏற்பட்டதே தவிர ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டு ஒற்றுமைக் குறைவும் பிளவும் ஏற்படுவதற்கல்ல. தற்கால நாகரிகம் போட்டியின் அடிப்படையில் அமைந்தது. ஆனால் நமது முன்னோர்கள் வகுத்த திட்டம் ஒற்றுமையின் அடிப்படையில், எல்லா மக்களின் கூட்டுறவில், அமைக்கப்பட்டது. அதனால் சிறுபான்மையினர்கூட போட்டியும் வேலையில்லாத் திண்டாட்டமுமின்றி பிற சமூகத்தினருடன் சௌஜன்யமாக வாழமுடிந்தது. உதாரணமாக நகை செய்யும் ஆசாரி வகுப்பினரை எடுத்துக்கொள்வோம். சமுதாயத்தில் சிலரே கொண்ட கோஷ்டியினர் அவர்கள். பிற சாதியினர் அந்தத் தொழிலை மேற்கொள்ளக் கூடாது என்னும் விதி பாதுகாப்பாக அமைந்திருப்பதால் அவர்கள் குலத்தொழிலில் போட்டியின்றி, சுபிக்ஷமாக தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து

வருகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைக்கு ஜீவாதாரமான பொருள்கள் இதரமக்களால் கொடுக்கப்பட்டு வருகிறது. சமூகத்தினரின் அலங்கார அணிகலன்களையும் அவர்கள் செவ்வனே செய்யமுடிந்தது.

## சிறுபான்மைப் பூச்சாண்டி

சிறுபான்மை வகுப்பினர் பெருபான்மை மக்கள் என்ற பேத உணர்ச்சி ஹிந்து சமுதாயத்திலேயே கிடையாது. தொழிற்பிரிவுகொண்ட ஒரே சமுதாயம் என்று எண்ணி வாழும்போது பேதஉணர்ச்சிக்கு இடமேது? இந்த பேதஉணர்ச்சி மேனாட்டிலிருந்து நமக்குக் கிடைத்த விசித்திரம். போட்டியின் அடிப்படையில் அமைந்துள்ள மேனாட்டு சமூகம், 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற தர்மத்தை அனுஷ்டித்து வாழ்கிறது. அங்கு கூட்டுறவோ சமுதாய உணர்ச்சியோ கிடைப்பதே கிடையாது. 'எல்லோரும் இன்புற்று இருக்கவேண்டும் பராபரமே' என்ற தத்துவத்தையுடையது பாரத நாடு. தொழிலில் போட்டியிட்டு மக்கள் வாழ்க்கை நடத்த வகையற்று மடியக்கூடாது என்று பாகுபாடும் கட்டுப்பாடும் ஏற்பதற்கு நல்வாழ்வு வாழ்ந்தார்கள் நம் முன்னோர்கள். அந்தக் கட்டுப்பாடு இல்லாவிட்டால் மேனாட்டு கலாசாரத்தின் தொடர்பால் இன்று ஏற்பட்டுள்ள போட்டியும் பொறாமையும் என்றோ பாரத சமுதாயத்தை அழித்திருக்கும்.

பழைய காலத்தில் சிறுபான்மை வகுப்பினரும் கிடையாது; அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பிரச்னையும் இல்லை. இன்று சிறுபான்மை வகுப்பினர் பாதுகாப்பின் பெயரால் 'மெஜாரிட்டி' யுடன் போட்டியிட முன் வந்துவிட்டார்கள். தொழிலில் வேற்றுமையிருந்தாலும் அந்தஸ்திலும் வாழ்க்கையிலும் ஒற்றுமையும் சமதையும் இருந்தால் இந்தப் பிரச்னை ஏது? ஆள்பலம்கொண்ட 'வோட்'டின் பெயரால் இன்று பூச்சாண்டி காட்டப்படுகிறது. அரசியல் காரணங்களுக்காக ஆதிக்க பலத்திற்காக ஆள்பலமும் 'வோட்டும்' சேர்க்கப்படுகிறது. உணவுப் பிரச்னைக்கு 'வோட்' பலம் உதவாது. உதாரணமாக சிறுபான்மை சமூகத்தினரான பொற்கொல்லர்கள், அரசியல் ஆதிக்கம் பெற ஆள்பலம்பெற முற்பட்டால் அந்த சமூகத்திற்கே பொருளாதாரத் துறையில் அழிவைத் தேடிக் கொள்பவராவர். தொழிலாளர் எண்ணிக்கைக் கேற்ப அந்தத் தொழில் விஸ்-

தரிக்க வழியில்லை யாகையால், இருக்கும் தொழிலை எல்லோரும் பிரித்து வேலை செய்யவேண்டும், ஆகவே வருமானத்தையும் பங்கிட்டுக் கொள்ளவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டு விடுகிறது. உணவுப் பிரச்னைக்கு ஆள்பலம் பிரயோசனமான சாதனமல்ல.

ஆனால், அந்நிய மதத்தினரின் படையெடுப்பின் காரணமாக நமது சமுதாய அரசியல் அந்தஸ்தும், வருணாசிரம தர்மமும் குலைந்து விட்டது. ஜனத்தொகை, 'வோட்' என்று பல்வேறு சூழ்ச்சிகள் ஏற்பட்டு சமுதாயத்தில் பிளவை ஏற்படுத்திற்று. மத மாற்றமும் புது சமூகமும் தோன்றி இன்னும் பல புதிய தீமைகளை உண்டு பண்ணிற்று. அன்னிய ஆட்சியினாலும்; முகம்மதிய கிறிஸ்துவ மதங்களினாலும் நாம் பட்ட சிறுமைகளும் அடைந்த கேடுகளும் அனந்தம்.

## உரிமையும் கடமையும்

மேனாட்டு நாகரிகத்தில் மோகம் கொண்டதால் நமது சமூகம் சரிந்து வீழ்ந்தது. கடமையை மறந்து மனிதன் உரிமையை ஸ்தாபிக்க முன் வந்துவிட்டானே தவிர சமுதாயத்தில் அவனுக்கு இருக்கும் பொறுப்பை உணரவில்லை. உரிமையும் கடமையும் ஒரு காசின் இருபுறமுள்ள பூவும் தலையும் போல. பல்வேறு பிரிவுகளின் கூட்டுறவில் அமைந்தது தான் சீர்பட்ட சமுதாயம். போட்டியும் பொறாமையும் ஏற்பட்டால் சமுதாயம் நிலை குலைந்துவிடும். பண்பட்ட சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் கடமையை உணர்ந்து நடப்பான். அவனுக்கு உரிமையைப் பற்றி கவலை கிடையாது. ஆனால் சுயநலத்தில் தோன்றிய சமூகக் கூட்டத்தில், ஒவ்வொரு மனிதனும் சுய நல நோக்குடன் உரிமைக்காகப் போராடுவானே தவிர சமுதாய வளர்ச்சிக்காகத் தான் செய்யவேண்டிய கடமையைப் பற்றி எண்ணமாட்டான். பண்பட்ட சமுதாயத்தில் உரிமையை மட்டும் எண்ணி ஒருவன் வாழமுடியாது. ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை யுண்டாகையால் சமுதாயத்தின் சாந்தியும் சந்துஷ்டியும் சத்தியத்தின் அடிப்படையில் அமைகிறது. தன் கடமையையும் பிறர் உரிமையையும் எண்ணி சமுதாயத்திலுள்ள எல்லோரும் வாழ்ந்தால் கட்டுப்பாடும் சாந்தியும் ஏற்படும். கடமையை மறந்து உரிமைக்காக மட்டும் போராட்டம் நடந்தால் துன்பமும் துயரமும்தான் எஞ்சும். சென்ற யுத்தம் ஆரம்பித்த சமயத்தில் எச். ஜி. வெல்ஸும் இதர மேனாட்டு அறிஞர்களும் உலக சமா

தானத்திற்கு மனிதனின் உரிமையை வரையறுக்க வேண்டுமென்று ஒரு விவாதத்தை ஆரம்பித்தார்கள். உரிமைக்குப் பதில் மனிதனின் கடமையைப் பற்றி சிந்தித்து இருந்தால் பயன் கிடைத்திருக்கும். சென்ற நூற்றாண்டில் பிரான்ஸில் ஏற்பட்ட சுதந்தரப் புரட்சியின்போதும் மக்களை (மனிதனின்) உரிமைக்காகவே போராடினார்கள். பண்பட்ட சமுதாய அமைப்பு இல்லாத மேனாட்டிலே, சுய தேவைத்திட்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ளும் வர்ணாசிரம திட்டம் இல்லாத மேனாட்டு சமூகத்திலே தனி மனிதன் உரிமைக்காகப் போராடவேண்டியதாயிற்று. அத்துடன் மக்கள் முடியரசின் கீழ் சுதந்தரமற்று வாழ்ந்து வந்தனர். ஆகவே, தங்கள் உரிமையை ஸ்தாபிதம் செய்து கொள்ளவும் அரசனின் பிடிப்பிலிருந்து விடுதலையடையவும் புரட்சி செய்தனர்.

பாரதநாட்டின் நிலைமையே வேறு. இங்குள்ள சமூக அமைப்பே ஒரு தனிரகம். பொருளாதார அமைப்பில் ஏற்பட்ட்து இந்திய சமூகம். மக்களின் உரிமையைப் பற்றிய பேச்சே இங்கு எழவில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் பரிபூரண சுதந்தரம் இருந்தது. அரசன் மக்களின் பிரதிநிதியாகவிருந்து அரசு நடத்தினானே தவிர அவர்களின் உரிமையில் கைவைத்து அடக்கியாளும் கொடுங்கோலனாக வாழவில்லை. நாட்டின் உரிமையாளனாகவோ, சட்டமியற்றும் தனி அதிகாரியாகவோ, நீதி வழங்கும் எதேச்சாதிகாரத் தலைவனாகவோ அவன் என்றுமே வாழவில்லை. மக்களின் பிரதிநிதியாக மக்களுக்காக அரசு செலுத்தி நாட்டுக்காவலனாக வாழ்ந்துவந்தான். நீதிவழங்க பஞ்சாயத்து சபைகள் இருந்தன. அரசனுக்கும் குடிகளுக்கும் குரோதம் ஏற்பட வழியில்லாமலும், மனிதனுக்கு மனிதன் போட்டியிட்டு மாளும் வகையில்லாமலும் சமுதாய அமைப்பு ஏற்பட்டிருந்ததால் இங்கு புரட்சிக்கு இடமேற்படவில்லை. உரிமையை ஞாபகப்படுத்தாது கடமையை ஞாபகப்படுத்தி மக்களை நல்வழிப்படுத்தும் ஒரே வேலைதான் அரசனுக்கிருந்தது. அத்துடன் நீத்தோர் கடனும் தெய்வ வழிபாடும் கடமையெனப் போதித்து மனச்சாட்சியும் தூய்மையுணர்ச்சியும் போதிக்கப்பட்டது.

## சக்தியும் பிரிவும்

நமது சமுதாய அமைப்பிலேயே ஒரு விசேஷ அம்சம் வலிமை, அறிவு, சொத்து இவற்றை (தனம், பலம், வித்தை

என்ற) தீவிர சக்திகளாக வகுத்திருப்பதுடன் இவை எல்லாம் ஒருமிக்க ஒரே மனிதனிடம் சேராது பலரிடம் பிரிந்து இருக்க சமுதாய அமைப்பில் தொழிலைப் பிரித்திருப்பதுதான்.

பிராமணனிடம் அறிவுப்பலம் மட்டுமிருந்து வலிமையும் சொத்தும் சேராதிருக்க திட்டமும், க்ஷத்திரியனிடம் தேச பலமும் மற்ற சமூகத்தினரிடம் பொருளாதார பலமும் சேரத் திட்டம் வகுக்கப் பட்டிருந்தது. இம்மாதிரித் தனித்தாக அறிவையும், சொத்தையும், தேகபலத்தையும் பிரித்துவைத்திருப்பதால் சமூகத்தில் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்துவாழ முடியாத நிலைமை ஏற்பட்டுவிடுவதுடன் இவர்களது ஐக்கியத்தினால் அற்புதமான கட்டுப்பாடும் சமூகவளர்ச்சியும் ஏற்பட முடிந்தது. தனம், பலம், வித்தை என்ற இந்த மூன்று சக்திகளைப் பிரித்து விட்டதால் சமூகத்தில் எளியவன் வலியவன் என்ற பேதமும் ஏற்பட வகையற்றுவிட்டது.

வித்யா பலமுள்ள பிராமணன், தன் பலத்தையும் பெற்று விட்டால் அவன் அகங்காரம் கொண்டு சமூகத்தைத் துச்சமாக மதிக்க ஆரம்பித்துவிடுவான். அவனால் சமூகத்திற்கே கேடு விளையும் நிலைமையும் ஏற்பட்டுவிடும். ஆகவே அவன் ஏழையாகவே வாழவேண்டுமென திட்டம் வகுக்கப்பட்டது. ஏழைமை அவனது வித்யா கர்வத்தை அடக்கி, சமூக சேவகனாக்கிவிட உதவிற்று. அதே போல பண பலமுள்ள சூத்திரனும் வைசியனும் வித்யா பலம் பெறமுடியாதபடி கட்டுப்படுத்தப்பட்டது. தொழிலை மறந்து வித்யா மோஹம் கொண்டு அதில் வெற்றியும் பெற்றுவிட்டால் அவனும் அக்ங்காரத்தினால் சமூகத்திற்கே பெருங்கேடாக மாறிவிடுவான் என்று தடுக்கப்பட்டது. ஸரஸ்வதியும் லக்ஷ்மியும் ஒரு இடத்தில் கூடி வாழமாட்டார்கள் என்பது ஐதீகம். அதாவது வித்தையும் பணமும் ஒருவனிடத்தில் கூடிவிட்டால் அவன் சுய நலங்கொண்டு அகங்காரத்தினால் தனது கடமையை மறந்து சமூகத்திற்குப் பயன்படாது போய் விடுவான் என்பதை ஞாபகப்படுத்தவே இந்த ஐதீக வார்த்தை சிருஷ்டிக்கப்பட்டது போலும்.

புராணங்களில் ராக்ஷஸர்களைப்பற்றி நாம் அநேக கதைகளைப் படிக்கிறோம். இந்த ராக்ஷஸர்கள் யார்? எல்லா சக்திகளையும் ஒருங்கே பெற்று சுயநல நோக்குடன் உலகை வளைத்து ஆள ஆசைகொண்டவர்கள்தான். ஹிரண்யகசிபு என்னும் அசுரன் ஆண்டவனிடம் அமோகமான வரங்களைப் பெற்றான்,

அவன் சாகாதிருக்கப் பெற்ற வரமே அதி அற்புதமானது. பக்தியை மெச்சி ஆண்டவனும் அவன் கேட்டதைக்கொடுத்தார். ஆனால் என்ன நடந்தது? அதி சீக்கிரத்தில் அவன் உலகிற்கே ஒரு சாபத்திடு என்பதை நிரூபித்து விட்டான். கடைசியில் அவனை அழிக்க ஆண்டவன் பூமியில் அவதரிக்க வேண்டியதா யிற்று. பணமும் அறிவும் ஆற்றலும் ஒருவனிடம் சேர்ந்தால் அகங்காரம் கண்ணை மறைத்துவிடும். தனக்கிருக்கும் சக்திகளை அடக்கியாண்டு வாழ்பவர்கள் மிகச் சிலர்தான்.

இன்று உலகில் புராணகாலத்து அசுரர்கள் இல்லை. ஆனால் மேனாட்டு மக்கள் எல்லோரும் அசுர குலத்தினர்தான் என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாம். உலகிலுள்ள பொருள்களைத் தனதாக்கிக் கொள்ள அவர்கள் நடத்தும் போரும், படும் ஆசையும், அதற்காக நடத்தும் விஞ்ஞான ஆராய்ச்சியுமே சான்று. மிருக பலத்தையே பிரதானமாகக் கொண்டு அவர்கள் புராணத்தில் வரும் சுந்தன் உபசுந்தனைப் போல ஆதிக்க வெறியால் அலைவதைப் பார்த்தால் அதி சீக்கிரத்தில் இந்த அசுரர்களை மாய்க்க ஆண்டவன் பூமியில் அவதரிக்கவேண்டும் என்று பிரார்த்திக்கத்தான் தோன்றுகிறது. இன்று மிருக பலத்தை எதிர்க்க ஆண்டவன் அவதரிக்காவிட்டாலும், அஹிம்ஸை என்னும் சிறந்த ஆயுதத்தைத் தந்துவிட்டான். அதுவும் பாரதவாசிகளின் கையில் கொடுததிருக்கிறான். அதைத் திறம்படக் கையாண்டு உலக சமாதானத்திற்கு வழிகோலவும் மகாத்மா காந்தி என்ற ஆச்சர்ய புருஷன் நம்மிடையே வாழ்கிறார்.

## ஜாதித் திமிர்

சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு, அமைதியும் சந்தோஷமாகவும், எப்படி சமுதாயம் வாழ நமது முன்னோர்கள் திட்டம் வகுத்து வாழ்ந்துவந்தார்கள் என்பதை ஆராய்ந்தோம். ஆனால் வெளியாரின் தலையீட்டினால் நமது சமூக அமைப்புச் சீர்குலைந்து நாமும் அடிமைகளாக வாழ்ந்து வருகிறோம். சமூகத்தில் ஏற்பட்ட அவகேடுகளைப்பற்றி இனிக்கவனிப்போம்.

## உயர்ந்த சாதி - அடிமைச் சாதி :

சமுதாயத்தில் தொழிற்பிரிவுகள் ஏற்பட்டபோது எல்லோரும் ஓர் குலமென்ற ஒரே நீதியில்தான் மக்கள் வாழ்ந்தனர். ஏற்றத்தாழ்வு உணர்ச்சி என்பது அப்போது கிடையாது.

தாம் செய்யும் தொழில் சமுதாய வளர்ச்சிக்கேற்றது, அதனல் எல்லோரும் பயனடைவார்கள் என்பதை உணர்ந்து ஒவ்வொரு தொழிலாளியும் தம்தம் கடமையுணர்ந்து சந்தோஷமாகத் தன் பணியாற்றி வந்தான். காலக்கிரமத்தில் சமுதாயத்தில் ஜனத் தொகை பெருகப் பெருக, மக்கள் கடமையுணர்ச்சியை மறந்து விட்டதுடன் ஏற்றத்தாழ்வு, சுசி அசுசி என்ற பாகுபாட்டைக் கற்பனை செய்ய ஆரம்பித்தனர். இதனல் பெருங்கேடுகள் விளைய ஆரம்பித்தன. தொழிலால் சிலர் உயர்வு கொண்டாடினர்கள். மற்றவர்கள் அவர்களது அகங்காரத்திலீடுபட்டு பொருமைப்பட்டனர். அத்துடன் உயரிய பதவியிலிருப்பவர்கள் தனிச்சாதி முறையும் சலுகையும் கொண்டாடவே சமுதாயத்தில் பிளவும் குழப்பமும்தான் மிஞ்சிற்று. சமுதாயத்தில் ஏற்பட்ட இந்த ஏற்றத்தாழ்வு உணர்ச்சி வாழ்க்கையின் ஜீவனையே உறிஞ்சிவிட்டது. ஏற்றத்தாழ்வு உணர்ச்சியும் பேதாபேதங்களும் இங்கு ஸ்திரப்பட்டு பிளவு ஏற்பட அன்னியர் ஆதிக்கமும்தான் பிரதான காரணம்.

அடுத்தபடியாக ரெயில்வே, தந்தி, முதலிய தூரத்தையும் காலத்தையும் வெல்லும் நவீன சாதனங்களும்கூட நமது வீழ்ச்சிக்கு ஓரளவு காரணம். ஆளும் வர்க்கத்தின் குணங்களும் நாகரிக, போகங்களும் போகப்பொருள்களும் அதிதுரிதத்தில் நமது கிராமங்களில் புகுந்து தீமை விளைவிக்க இந்த சாதனங்கள் பெரிதும் உதவுகின்றன. இதனல் நமது பண்பும் பழக்க வழக்கங்களும் மறைந்து, அரசியல் அடிமையானதுடன் கலாசாரத்திலும் நாம் மேனுட்டினரின் அடிமைகளாகி வருகிறேம்.

மேனுட்டு நாகரீகத்தில் நாம் ஈடுபட்டதின் பயனுக நமது வாழ்க்கைருசி மாறிவிட்டது. நமது கைத்தொழில்களுடன் போட்டியிட்டு யந்திர உற்பத்தியினுல் போகப்பொருள்களை இங்கு கொண்டுவந்து குவிக்கிருர்கள் மேனுட்டார். அதனல் நமது தொழிலாளர்கள் பட்டினி கிடந்து, கைத்தொழில்கள் நசிக்கின்றன.

கிராமங்களில் தனித்தனியாக சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு நாம வாழ்ந்துவந்தபோது நமக்கு அந்நிய நாட்டுப் பொருள்கள்மீது மோஹமில்லை. ஆங்காங்கு கிடைக்கும் சாதனங்களைக் கொண்டு நம் முன்னேர்கள் திருப்தியாக வாழ்க்கை நடத்திவந்தார்கள். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் தயாரிக்கி இங்கு இறக்குமதியாகும் ரூவாக்கர் ஓட்ஸிலும்,

ரீடிங் பிஸ்கெட்டிலும் மனத்தைப் பறிகொடாமல் உள்ளூரில் விளையும் சோளம், ராகி, வெள்ளரி, மா முதலியன தின்று திருப்திப்பட்டு வாழ்ந்தார்கள். ஆனால் இன்று நமது வாழ்க்கையும் ருசியும் மாறிவிட்டது. அரசியலில் அடிமைபோல ருசியிலும் பண்பிலும் நாம் மேனாட்டாருக்கு அடிமைப்பட்டு வருகிறோம்.

உள்ளூர் சக்கிலி தைக்கும் செருப்பைவிட, இங்கிலாந்தில் தயாரிக்கும் பூட்ஸை நாடுகிறது மனம். வாழ்க்கைக்குத் தேவையற்ற ஆடம்பரப் பொருள்களின்மீது மனம் அலைவுறுகிறது. அதனால் பொருளும் மானமும் பறிகொடுத்துத் தவிக்கிறோம்.

நாகரிகத்திற்கு அடுத்தபடியாக நமது சமூகத்திற்கு உலை வைத்தது அயல்நாட்டு யந்திர சாதன உற்பத்தியும் நாணயச் செலாவணியும். அன்னிய ஆட்சி இங்கு நாணயச்செலாவணியில் செய்த மாறுதலால் சரளமான நாணயப் பழக்கமும் அதனால் அன்னியநாட்டு வியாபாரம் செழிக்கவும் வசதி ஏற்பட்டது. காகித நாணயமும், கப்பலும் ரெயிலும் உள்நாட்டுச் சரக்கை வெளியேற்றவும் அயல்நாட்டுச் சரக்கை அதிதுரிதமாக நாடெங்கும் பரப்பவும் உதவி செய்தன. இதனால் நமது சமூகக் கட்டுக்கோப்பு குலைந்து ஆடம்பரத்தில் நாம் மனம் செலுத்த வழியேற்பட்டது.

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல ஏற்பட்ட தீமை நமது அரசியல் அடிமைத்தனம்தான்.

## அடிமைத்தளை

மேனாட்டில் யந்திரயுகம் தோன்றியதும் பாரதநாடு சுதந்திரமிழந்து அன்னியர் ஆதிக்கத்தில் வந்ததும் கிட்டத்தட்ட ஒரே சமயம். ஆகவே யந்திர சாதன உற்பத்தியை உடனடியாக விநியோகித்துப் பொருள் திரட்ட ஒரு நிரந்தர மார்க்கட்டும் இங்கு ஏற்பட்டுவிட்டது. யந்திர மோஹத்தில் நாம் மட்டும் விழவில்லை. உலகமே அதில் சிக்கிக்கொண்டது. ஆனால் நாம் அதனாலேற்பட்ட தீமைகளைப் பரிபூரணமாக அனுபவிக்க நேர்ந்தது.

குடியரசாட்சியுள்ள நம் நாட்டுக் கிராமப் பஞ்சாயத்து முறையை கும்பெனி அரசாங்கம் நன்றாக ஆராய்ந்துப் பார்த்தது. உலகில் புரட்சிகரமான மாறுதல்களேற்பட்டாலும் நமது அரசியல் முறையும் பண்பாடும் அசைக்கமுடியாதவை, அழிக்க

முடியாதவை என்று கண்டு கொண்ட கும்பெனி அரசாங்கம் சுதந்திரமும் சுகவாழ்வும் பெற்று வாழும் பாரதமக்களை வீழ்த்தி அடிமைகளாக்கி அரசியல் ஆதிக்கம் பெறவேண்டுமானுல் முதலில் அவர்களது அரசியல் முறையை மாற்றவேண்டுமென்று நிச்சயித்தது. கிராம சுயாட்சியைக் கலைத்து கல்கத்தாவிலிருந்துகொண்டே நாடு முழுவதையும் கட்டியாளச் சூழ்ச்சி செய்தது. டெல்ஹியில் வாழ்ந்த மொஹலாய சக்ரவர்த்தியிடம் நாட்டின் அரசியல் இல்லையென்பதையும் ஒவ்வொரு கிராமமும் சுயவாழ்வும் நிர்வாகமும் நடத்தி சுதந்திர வாழ்க்கை நடத்துகிறது என்பதையும் அதிசீக்கிரத்தில் உணர்ந்த அன்னியர்கள், இந்த ஜனநாயக ஆட்சியைக் குலைக்க சதிசெய்தனர்.

வங்காள நவாப் சுராஜ்-உட்-டௌலாவை ஜயித்ததினலோ, மகாராஷ்டிர சத்ரபதி பேஷ்வாக்களை முறியடித்ததினலோ இந்தியரை அடிமைப்படுத்த முடியாது என்று கண்டுகொண்ட அன்னியர்கள் தம் வசமுள்ள கிராமங்களிலுள்ள பஞ்சாயத்துக்களைக் கலைத்து, மக்களின் அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் கைவைத்தனர். அன்னிய ஆதிக்கம் நமது தினசரி வாழ்க்கையில் தலையிட்டு கிராமங்களைச் சீர்குலைக்க முற்பட்ட பின்னர்தான் பாரதவாசிகள் சுதந்திரமிழந்து அடிமைகளாயினர்.

அரசியல் மாறுதல்களினுலும், அன்னியப் படையெடுப்புகளினுலும் பாரதநாட்டில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டது. டெல்ஹி, புனு, மூர்ஷிதாபாத் முதலிய நகரங்களைத் தலைநகராகக் கொண்டு எத்தனையோ ராஜ்யங்கள் தோன்றின. நாட்டாசையும், வீர உணர்ச்சியும் கொண்ட போரும் சாம்ராஜ்ய வெற்றியும்தான் அவை. கிராம வாழ்க்கையிலும், கிராம அரசியலிலும் மொஹலாயர்களும் அவர்களுக்குப் பின் தோன்றிய சாம்ராஜ்யங்களும் தலையிடவில்லை. அதனுல் கிராம அரசியல் சுதந்திரமாகவும் மக்கள் சுபிக்ஷமாகவும் வாழ்ந்துவந்தனர். அரசர்களும் உள்நாட்டு நிர்வாகத்தில் தலையிடாது மக்களின் பிரஜா உரிமையைக் கௌரவித்து வந்ததால் சமுதாயம் தோன்றிய நாளிலிருந்து ஆயிரக்கணக்கான வருஷங்களாக நடந்துவந்த கிராம அரசியல் தடையில்லாது நடந்துவந்தது. கிராம மக்களும் உள்நாட்டு நிர்வாகத்தில் அரசர்கள் தலையிடாதுவந்ததில், அடிக்கடி அரசுரிமை மாறியபோதுகூட அதிக சிரத்தை காட்டாமல் வாழ்ந்துவந்தார்கள்.

ராமன் ஆண்டால் என்ன ராவணன் ஆண்டால் என்ன என்னும் வழக்குமொழி அரசர்கள் கிராம அரசியலில் தலையிடாததினால்தான் ஏற்பட்டது போலும். 1812 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பார்லிமெண்டரி கமிட்டி ரிபோர்டில், ஸ்ரீ. ஆர். ஸி. தத்தர் கிராம அரசியல்பற்றிக் கூறும்போது பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"அனாதிகாலம் தொட்டு மக்கள் இந்த அரசியல் முறையில் சுகமாக வாழ்ந்து வருகிறார்கள். அரசுரிமை மாறுவதிலோ, பிளவுபடுவதிலோ மக்கள் அதிகக் கவனம் செலுத்துவதே கிடையாது. அவர்களுடைய அரசாங்கம் வாழும் கிராமம் மட்டும் தான். அதில் யாரும் தலையிட்டுப் பொருளாதார, அரசியல் துறைகளில் பிளவு ஏற்படுத்தாதிருக்கும்வரை அவர்களுக்கு நாட்டை யார் ஆண்டாலும் கவலையில்லை."

பேஷ்வாக்களிடமிருந்து ஸ்வீகரித்துக்கொண்ட பிரதேசங்களின் நிர்வாகம் பற்றி 1819ல் எல்பின்ஸ்டன் குறிப்பிடுகையில் "ஒவ்வொரு கிராமமும், அரசியல், பொருளாதாரத்துறைகளில் தனித்தனி அரசுகளாக வாழ்கின்றது. நாட்டிலுள்ள பிரதான அரசு மாறினால்கூட தினசரி வாழ்க்கையில் மாறுதலேற்படாத படித் தற்காப்புச் செய்துகொள்ளும் ஆற்றல் அதற்கு உண்டு" என்று எழுதியிருக்கிறார்.

சார்லஸ் மெட்காப் 1830 ஆம் ஆண்டில் எழுதிய குறிப்பில் உள்ள ஒரு பகுதி இது. "ஒவ்வொரு கிராமமும் தனிக்குடியரசாக வாழ்கிறது. எல்லாத்தேவைகளையும் அங்கேயே சமாளித்துக் கொண்டு, அரசியல் பொருளாதார அந்தஸ்தில் சுதந்திரவாழ்வு நடத்துகின்றன. அரசபரம்பரை க்ஷீணித்து நாட்டில் புரட்சி ஏற்பட்டு அரசு மாறினாலும் கிராம அரசியலும் நிர்வாகமும் குலையவில்லை. ஹிந்து, பட்டாணியர், மொகலாயர், மகாராஷ்டிரர்கள் சீக்கியர்கள், வெள்ளையர், முதலிய பலர் பாரத நாட்டின் அரசியலைக் கைப்பற்றி வாழ்ந்தனர். ஆனால் எல்லா அரசுகளிலும் மாறுதலின்றி ஒரே மாதிரி நிர்வாகத்தை நடத்தி வந்திருக்கின்றன இந்தக் கிராம அரசியல் சபைகள்."

## சுயதேவைத் திட்டத்திற்கு டார்பிடோ

கிராமக்குடியரசுகளைக் கைவசப்படுத்திக்கொண்டால்தான் நாட்டின் பரிபூரண ஆதிக்கத்தைப் பெறமுடியுமெனக் கண்டு கொண்ட கிழக்கிந்திய கம்பெனி சர்க்கார் இந்த அரசியல்சபை

களை அழிக்கும் வேலையில் ஈடுபட்டது. அனுதிகாலந்தொட்டு எந்த அரசனும் செய்யத்துணியாத ஒரு ஈனத்தொழிலை வியாபார நோக்குடன், சுயநல ஆசையுடன், கிழக்கிந்திய கம்பெனி கையாண்டது. அதனுல் நாட்டின் பெரும் பகுதி மக்கள் சுதந்திரமிழந்து தவிக்க வேண்டியதாயிற்று.

ஆதிக்க வெறிகொண்டுமட்டும் கும்பெனி சர்க்கார் கிராம அரசியலைத்தகர்க்க முற்படவில்லை. கிராம அரசியலின் பிரதான திட்டமான சுய தேவைத்திட்டத்தை அழித்து பிறர்கையை எதிர்பார்க்கும் நிலைமையை ஏற்படுத்திஞல்தான் மக்கள் பராதீனப்படுவதுடன் தங்கள் வியாபாரமும் தழைத்தோங்கும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அரசியலைப்பற்றியோ அரசியல் நிர்வாகத்தைப்பற்றியோ அதன் நன்மை தீமைகளைப் பற்றியோ கும்பனி ஆட்சிக்குக் கவலையில்லை. தங்கள் சரக்கை விற்க 'மார்க்கட்டு' வேண்டும். அதற்காக எந்த ஈனத்தொழிலும் செய்யத் தயாராயிற்று இது.

இன்று நமது அரசியல் வீழ்ச்சிக்குப் பிரதான காரணம் வர்ணுசிரம தர்மம்தான் எனச் சிலர் பிரசாரம் செய்கிருர்கள். அதில் ஒரளவு உண்மையில்லாமல் இல்லை. உணவுக்கும் உடைக்கும் பிறர்கையை எதிர்பாராது ஒவ்வொரு கிராமமும் தம்தம் தேவையை அங்கேயே உற்பத்தி செய்து பூர்த்திசெய்து கொள்ள வேண்டுமெனத் திட்டம் வகுத்து, அதற்காக சமுதாயத்தில் இன்ன இன்னுர் அந்தத் தொழில்களை மேற்கொள்ள வேண்டுமென்று வரையறுத்து அமலுக்குக் கொண்டுவந்தார்கள் நமது முன்னேர். ஆனல் ஏற்றத்தாழ்வு, ஜாதிப் பிரிவு, பெருமை முதலிய தீக்குணங்களைக் கற்பித்து சமூகத்தில் பிளவு ஏற்பட்டதால் நாம் வீழ்ச்சியுற்ருேம். நமக்குள் மித்ர பேதம் செய்து பிரித்த பெருமை பிரிட்டிஷாரையே சேரும் என்ருல் மிகையாகாது.

சுயதேவைத் திட்டத்தில் கிராம மக்கள் பரிபூரணவெற்றியடைந்திருந்ததால்தான் நாட்டில் எந்த அரசு இருக்கிறது என்று தெரிந்துகொள்ளாதபடி மக்கள் வாழ்ந்து வந்தனர். மொகலாய ஆட்சியிலும் பின்பும், நாட்டில் நடக்கும் அரசியல் போர்களைப்பற்றி மக்கள் தீவிரமாகச் சிந்திக்கவேயில்லை. இன்று மொஹலாயன்வந்து அரசிறை கேட்டால் கொடுப்பார்கள்; நாளை மராட்டியன் வந்து கேட்டால் கொடுப்பார்கள். அத்

துடன் அவர்களுக்கு ஆளும் வர்க்கத்திடமிருக்கும் சிரத்தையும் தொடர்பும் நின்றுவிடும். அரசர்களிடையே மூளும் போர்களிலும் வெற்றி தோல்விகளிலும் அவர்களுக்குச் சிரத்தை கிடையாது. இந்த மனோபாவம்தான் அவர்களைப் பிற்காலத்தில் படுகுழியில் வீழ்த்திற்று.

சுராஜ்-உட்-டௌலா முறியடிக்கப் பட்டபின்பு கிளைவ் தமது வீரர்களுடன் மூர்ஷிதாபாத்தில் பவனி வரும்போது, தமது சுதந்திரம் பறிபோயிற்று என்னும் எண்ணமில்லாது மக்கள் வீதிகளில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அதே அலட்சியபாவத்துடன் முன்பு எத்தனையோ ராணுவ பவனிகளை அவர்கள் வேடிக்கை பார்த்திருக்கிறார்கள். ஆகவே கிளைவ் நடத்திய ராணுவ பவனி, தங்களை நிரந்தர அடிமைத் தளையில் பிணைக்கப்போகும் வெற்றி ஊர்வலம் என்பதைச் சிறிதுகூட சிந்தித்துப் பார்க்கவேயில்லை அவர்கள்.

மேனாடுகளில் வெற்றி ஊர்வலங்களையும் மக்களின் மனோ எழுச்சிகளையும் பார்த்திருந்த கிளைவ், திருவிழாக் கூட்டம் போல அலட்சியபாவத்துடன் சந்தோஷமாகத் திரிந்து கொண்டிருந்த வங்காளியர்களைக்கண்டு பிரமித்து விட்டான். கும்பலைக் கண்டு பிரமித்ததுடன் அரசியல் சதி ஏதாவது நடக்குமோவென்று அஞ்சி ஊருக்குள் நுழையாமல் வெளியே கூடாரமடித்துத் தங்கினான். மக்களின் மனோபாவத்தை ஒருவாறு உணர்ந்த பின்புதான் அவன் வெற்றி ஊர்வலம் நடத்த மனம் துணிந்தான்.

இந்த அலட்சிய பாவத்தினால் முன்பு விசேஷ மாறுதலேற்படாவிட்டாலும், பிரிட்டிஷ் ஆட்சி அவர்களது ஜீவாதாரமான பிரஜா உரிமைக்கே உலைவைத்துவிட்டது. ஆங்கில ஆட்சியின் தீமையை காலங்கடந்துதான் மக்கள் உணர்ந்தனர். உணர்ந்து என் செய்வது? முன்பு நடந்ததுபோல ஆங்கில அரசாட்சியும் நடந்தது. ஆகவே மக்கள் சட்டெண அதன் தீமையை உணர்ந்து கொள்ள முடியவில்லை. கிராமம் கிராமமாக அரசியல் முறையை அழித்து, சுயதேவைத்திட்டத்தை சின்னாபின்னமாக்கி உண்ணும் உணவிற்கும் உடுத்தும் உடைக்கும் பிறர்கையை எதிர்பார்க்கும் நிலைமைக்குக் கொண்டுவர சிறுகச்சிறுகப் பாடுபட்டு நூறு வருஷ காலத்திற்குள் நம்மைப் பரிபூரணமாக அடிமைகளாக்கிவிட்டது பிரிட்டிஷ் அரசாங்கம். கிராமத்திலுள்ள தொழிலாளிகளான தச்சனும், குயவனும், கைக்கோளனும்கூட

வயிற்றில் அடிக்கப்பட்ட பின்புதான் நாம் நமது பராதீன வாழ்வின் கதியை உணரமுடிந்தது.

பசி, வேலையில்லாத்திண்டாட்டம், போட்டி, பொறாமை இவைகளை ஒழித்து சுபிக்ஷ வாழ்வு அளித்த சுயதேவைத்திட்டமும் வர்ணாசிரம தர்மமும்தான் மக்களை வெளியுலகில் நடப்பதைத் தெரிந்துகொள்ளாமலும், எதிர்த்துவரும் ஆபத்தைப் புரிந்துகொள்ளாமலும் செய்ததேதவிர, ஜாதிப்பிரிவினையை மட்டும் காட்டும் வர்ணாசிரம தர்மம் அல்ல. எத்தனையோ அரசுகள் மாறியிருப்பதை அவர்கள் பார்த்திருப்பதால் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டதைப் பற்றியும் அவர்கள் கவலைப்படவில்லை. ஆனால் அந்தோ! விதி அவர்களை சதிசெய்துவிட்டது. நாட்டாசையுடன், வியாபார திருஷ்டியுடனிருக்கும் பிரிட்டிஷார் நமது அடிப்படையை அழித்து சமுதாய வாழ்விலேயே கைவைத்துவிட்டனர்.

கடந்துபோன சம்பவங்களைப்பற்றி எண்ணிப்பயனில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் தீமைகளையறியாது வீழ்ந்த நம் முன்னோர்களைக் குறைகூறியும் பயனில்லை. இன்று நாம் விழிப்படைந்துவிட்டோம். இனி எதிர் காலத்தைப்பற்றிச் சிந்தனைசெய்து சுபிக்ஷ வாழ்வுவாழ நாம் திட்டம் வகுக்கவேண்டும்.

## பிரித்தாளும் சூழ்ச்சி

நாம் அடிமைப்பட்டு விட்டோம்; அன்னிய ஆட்சியையும் ஏற்றுக்கொண்டோம். அப்புறம் ஆளும் வர்க்கம் வகுத்தது தானே வாய்க்கால்! அன்னிய ஆட்சி இங்கு வேரூன்றி நிற்க, முதல்வதாக பிரிட்டிஷார் கையாண்ட தந்திரம் நம்மைப் பிரித்தாள வகுத்த முறைதான். நமக்குள் இருக்கும் தொழிற் பிரிவுகளுக்கு விசேஷ அர்த்தம் கற்பித்ததுடன் உரிமையென்ற பெயரால் சில ஜாதியாரின் மனத்தைக்கலைத்து மித்திரபேதம் செய்தனர். பொருளாதார வாழ்விற்காக வகுக்கப்பட்ட புனிதமான ஜாதிப்பாகுபாட்டிற்குத் தவறான அர்த்தம் போதித்து ஏற்றத்தாழ்வும் பொறாமையும் போதித்தனர். ஆளும் வர்க்கத்தின் இந்த சூதை நம்பிச் சிலர் ஏமாந்தனர். தங்களது வெற்றியைப் பலப்படுத்த ஆங்கிலக் கல்வியையும் புகட்டி நமக்கு ஒரு மாய வாழ்க்கையும் போலிக் கௌரவத்தையும் போதித்து வெள்ளையர் நம்மை நிரந்தர அடிமைகளாக்ச் செய்து கொண்டனர்.

அரசியல் காரணங்களுடன் நமது கைத்தொழில்களை நசுக்குவதிலும் பிரிட்டிஷாருக்கு விசேஷ சிரத்தையிருந்தது என்பதை முன்பே சொன்னேம். சுயதேவை திட்டமுள்ள நமது கிராம அரசியல் சபைகளையும் திட்டங்களையும் தகர்த்தெறிந்து தம் நாட்டுப் பொருள்களை இங்கு விற்பனை செய்ய வேண்டி கைத்தொழில்களையும் தொழிலாளர்களையும் நசுக்கி விட்டனர் ஆளும் சர்க்கார்.

## சோம்பலும் சுபிக்ஷமும்

சுயதேவைத்திட்டத்தில் பட்டினிக்கு இடமில்லையாகையால் தொழிலாளர்களின் ஊக்கம் குறைந்திருந்ததுடன் புதுத் தொழில்களைப் பயிலும் ஆற்றலும் சிரத்தையும் இல்லாமல் இருந்தது. இதனுல் இருக்கும் தொழிலே நசிக்கும் நிலைமை பிற்காலத்தில் ஏற்பட்டுவிட்டது. ஒரு சமயம் எல்லூரில் முடையும் ஒருவித மூங்கில் கூடையை மசூலிப்பட்டணத்திலிருக்கும் குறவனிடம் கொடுத்து அதேமாதிரி கூடை முடைந்து தரும்படிக் கேட்டேன். அவன் என்ன பதில் சொன்னுன் என்று நினைக்கிறீர்கள்? தெரியாது என்று பளிச்சௌச்சொன்னுன். எப்படி முடைந்திருக்கிறது என்று பார்க்கும் ஆவல்கூட அவனிடம் காணவில்லை. இந்த அசிரத்தைக்கு என்ன காரணம்?

எல்லூர் கூடையைப்போலதான் செய்தால் போட்டி ஏற்படுவதுடன் அந்தத்தொழிலாளி நஷ்டமடைவான் என்னும் நல்லெண்ணத்துடன் மசூலிப்பட்டணத்துக்குறவன் மறுத்துவிட்டான் என்றே வைத்துக்கொள்வோம். இந்தக்காலத்திலும் 'பேடன்ட்' முறைகள் போட்டியை ஒழிக்க அதே தடைகளைத் தானே செய்கின்றன?

தொழிலிலும் போட்டியில்லை. செய்யும் வேலைக்கும் நிரந்தரக் கூலியுண்டு. ஆகவே போட்டியும் புது உத்சாகமுமின்றி தொழிலாளர்கள் திருப்தியடைந்த வாழ்வு வாழ்ந்தார்கள். பசியும் வியாபார மந்தமும்தான் ஆராய்ச்சிகளில் மனம் செலுத்தத் தூண்டும். பசியாறச் சோறும் தொழிலில் போட்டியில்லை என்ற நிலைமையும் இருக்கும்போது திருப்திதானே நிலவும்!

அன்னியநாட்டு வியாபாரிகள், தங்கள் சரக்கு இங்கு விற்பனையாக வேண்டும் என்னும் ஒரே திருஷ்டியில் நெறிதவறி நடக்கச் சித்தமாக இருந்தார்கள். உள்ளூர் தொழிலாளர்களின்

சுபிக்ஷத்தைப் பற்றியோ தொழில் அபிவிருத்தியைப் பற்றியோ அவர்களுக்கு அக்கறையில்லை. உள்ளூர் தொழில்கள் நசித்தால் தங்கள் வியாபாரம் பெருகும் என்ற ஆசையும் அவர்களுக்கு ஏற்பட்டது. ஆகவே நாசவேலையிலும் அவர்கள் கவனம் சென்றது. அன்னிய ஆட்சியிலிருந்தும் போட்டியிலிருந்துமீள வழியில்லாததால் நமது தொழில்கள் நசித்தன.

இனி நமது ஒற்றுமை குலைந்ததின் காரணங்களைப்பற்றி ஆராய்வோம்.

# ரயத்வாரி முறை

பிரிக்கமுடியாத ஒரே குடும்பம்போல வாழ கிராம அரசியல் அமைக்கப்பட்டிருந்தது. அரசனுக்குச் சேரும் கிஸ்தியை தனித்தனியாக மக்களிடமிருந்து வசூலிக்காமல் கிராம சபைகளிடமிருந்து அரசாங்கம் வசூலித்து வந்தது. மொஸாவாரி என்னும் இந்த முறையினால் அரசனுக்கும் குடிகளுக்கும் நேரடியாகத் தொடர்பும் கிடையாது. கிராம நிர்வாகத்தில் அரசன் தலையிடுவதுமில்லை என்றிருந்தது.

பொருளாதாரச் சுரண்டலும் வியாபார நோக்குமுள்ள கும்பெனி சர்க்கார் கிராமப் பஞ்சாயத்துக்களைக் கலைத்ததும் தனித்தனியாக குடிகளுக்கு நில ஆர்ஜித பட்டா கொடுத்ததுடன் நேரடியாக வரி வசூல்செய்யும் ரயத்வாரி முறையை அமலுக்குக் கொண்டுவந்தது. அதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் சர்க்கார் சிப்பந்திகளையும் நியமனம் செய்தது. அதனால் கிராமத்தின் உள்நாட்டு நிர்வாகமும் அமைப்பும் சிதறி மக்கள் ஒற்றுமை குலைந்து நின்றனர்.

கும்பெனி ராஜ்யம் இந்தியாவில் நிலைக்கு முன்பேயே கிராம அமைப்புகளில் மாறுதலேற்பட ஆரம்பித்தது. மொகலாய சாம்ராஜ்யம் வீழ்ந்ததும், சிற்றரசர்கள் அதிக வரி போட்டு மக்களைத் துன்புறுத்தினர்; ஆங்காங்கு மொகலாய சக்ரவர்த்தியின் பிரதிநிதியாக வாழ்ந்துவந்த அதிகாரிகள் சர்க்காரின் தயவைப் பெற்று நாட்டின் சிலபகுதிகளை ஜாகீர் செய்து கொண்டனர். பின்பு இஷ்டம்போல அந்தப் பகுதிகளில் வரி விதித்து அரசு செலுத்தினர். இதனாலும் ஓரளவு கிராம நிர்வாகம் பாதிக்கப்பட்டது. ஆனால் பொருளாதாரத் துறையில் சீர்குலைத்து கிராம மக்களை ஒட்டாண்டியாக்கியது கும்பெனி ராஜ்யம்தான்.

ரயத்வாரி முறை அமலுக்கு வந்ததுமே, கிராமத்தில் தொன்றுதொட்டு சேவை செய்து வந்த தோட்டி, தலையாரி, கணக்கன் முதலிய பொது ஊழியர்களின் சேவையும் கௌரவமும் பாதிக்கப்பட்டது. கும்பெனி சர்க்காரின் பிரதிநிதியாக ஜில்லாதோறும் வாழும் கலெக்டர்களின் சிப்பந்திகளாக மாறி,

தம் சுதந்திரமிழந்து இட்டவேலை செய்யும் குற்றேவல்காரர் களாக அவர்கள் மாறிவிட்டனர். கிராம அரசியல் ஆட்சியில் அவர்கள் பெற்றுவந்த சுதந்தர மானியமும் நின்றுவிட்டது. கிராம மக்களிடமிருந்து நேரடியாக ஊழியம் பெறுவதைக் குற்றமெனச் சொல்லி சர்க்கார் கஜானாவிலிருந்து அவர்களுக்கு சம்பளம் கொடுத்து, மக்களுக்கும் கிராம ஊழியர்களுக்கும் இருக்கும் சாதாரணத் தொடர்பைக்கூட ரத்து செய்துவிட்டது இந்த சர்க்கார்.

வரிவசூல் செய்ய ஒரு கலெக்டர், அவர் கீழ் தாலூகா, பிர்க்கா, வட்டம் என்று கிராமங்களைத் தொகுதி தொகுதியாகப் பிரித்து, நேரடியாக கிராம நிர்வாகத்தை நடத்த முன்வந்தது அரசாங்கம். கிராமப்பஞ்சாயத்து தொன்றுதொட்டு அனுபவித்துவந்த நீதி, நிர்வாக உரிமைகளைப் பறித்ததுடன் வரி, தண்டனை விதிக்கும் உரிமைகளையும் ரத்து செய்தது. நீதி வழங்க ஜில்லாத் தலைமை ஸ்தானத்தில் நியாய சபைகளை ஏற்படுத்தி கிராமத்திலேயே தீர்ந்துவிடும் வழக்கை தொலை தூரத்தில் விசாரித்து மக்களைத் தொல்லைப்படுத்தியது. அன்னிய சர்க்கார் வகுத்த சட்ட திட்டங்களாலும், நியாயம் வழங்கும் முறையினாலும், காலஹரணத்தினாலும் மக்கள் படும் துயர் சொல்லமுடியாது.

தனித்து வாழாது, கிராமம் முழுவதும் ஒரு குடும்பமாக வாழ்ந்துவந்த கிராமமக்கள் அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய வரியை கிராமத்தின் சார்பாகவே செலுத்திவந்தார்கள். தற்கால வரி விதிப்பு முறையினாலும், அங்கு அங்கு ஏற்பட்ட போலீஸ் நீதி ஸ்தலங்களினாலும், நவீன போக்குவரத்து சாதனங்களினாலும், கிராமத்தின் ஒற்றுமையும் சுபிக்ஷமும் குறைந்துவிட்டது.

டாக்டர் பிஷப் கால்ட்வெல் என்பவர் மேனாட்டுக் கிராமங்களைப்பற்றி எழுதிய ஒரு குறிப்பையும் இங்கு கொடுத்தால் தான் நம் கிராம அமைப்புகளின் மேன்மையை ஒத்திட்டுப் பார்க்கமுடியும். அவரது குறிப்பின் ஒருபகுதி இதுதான்:

"ஆங்கிலக் கிராமங்களும் நகரங்களும், பல வீடுகளுள்ள பேட்டைகள் தான். மக்களுக்குள் சமூக ஐக்யமோ, தார்மிகப் பிணைப்போ பொதுநலன்களைக் கவனிக்கும் பஞ்சாயத்தோ அங்கு கிடையாது. ஆனால் இந்தியாவில் ஒவ்வொரு கிராமமும்

தனித்தனி குடியரசாக அமைந்திருக்கிறது. வரி வசூல், நீதி, நிர்வாகம், முதலிய எல்லா அம்சங்களிலும் பூர்ணத்வம் பெற்று அவை தனித்தனி அரசாங்கமாகவே திகழ்கின்றன. அநாதி காலம்தொட்டே இந்தமுறை அங்கு வேரூன்றிச் சிறப்பாக நடந்துவருகிறது.''

## இனி நாம் என்ன செய்யவேண்டும்?

இன்று நாம் சுதந்திரப்பாதையில் முன்னேறிக்கொண்டு இருக்கிறோம். கிராமப் புனருத்தாரணம் ஏற்பட்டால்தான் பரிபூரண சுதந்திரத்தை நாம் அனுபவிக்கமுடியும் என்பது நிதரிசனம்.

பாரதநாட்டில் நூற்றுக்கு எண்பது மக்கள் கிராமங்களில் தான் வசிக்கிறார்கள். வாழ்க்கையின் பிரதானத்தேவைகளான ஆடையும் உணவும் கிராமத்தில்தான் உற்பத்தியாகின்றன. இன்று நாகரிகமான நகரங்கள் தோன்றியிருந்தாலும் நம் வாழ்க்கையின் ஜீவாதாரமான பிடிப்பு கிராமங்களில்தான் இருக்கிறது. கிராமவாசிகளின் உழைப்பினால்தான் நகரங்கள் சுகபோக வாழ்க்கை ஸ்தலங்களாக மாறுகின்றன. நகரங்கள், கிராம வாழ்க்கையின் புல்லுருவி சொன்னால்கூட மிகையாகாது.

மீண்டும் நமது கிராம சமுதாயத்தைச் சீராக்கி சுயதேவை திட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்தால்தான் அன்னிய ஆட்சியிலிருந்து பரிபூரண விடுதலையடைய முடியும். மாகாண சட்டசபைகளையும் சர்க்காரையும் கைப்பற்றி விட்டதினாலோ, மந்திரிசபைகளில் மக்களின் பிரதிநிதிகள் நிறைந்திருப்பதினாலோ நிரந்தர லாபம் கிடையாது. பொம்மலாட்டத்தில் சூஸ்திரதார் இருப்பதுபோல மத்திய அரசாங்கத்தின் கையில் சூஸ்திரக் கயிறு இருக்கிறது. அதைத் தறித்து, கிராமங்கள் தம்தம் தேவையைப்பூர்த்தி செய்துகொண்டு, உள்ளூர் விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ள (மீண்டும்) பஞ்சாயத்து சபைகளை அமைத்துக்கொள்ளல்வேண்டும். மாகாண, மத்திய சர்க்கார்கள் ஆலோசனை சபையாகவும் நிர்வாகத்தின் மேலதிகாரிகளாகவும் இருக்கவேண்டுமே தவிர தினசரி வாழ்க்கையில் கிராம அரசியலில் தலையிடுவதாக இருக்கக்கூடாது. நமது அரசாட்சியின் தலைநகரம் லண்டனிலோ, டெல்லியிலோ இருப்பதால் பயனில்லை. இந்த 'சிவப்பு நாடா ஜபர்தஸ்து' மாறி அரசாட்சி

கிராமத்தில் நிலைக்கவேண்டும். உணவு, உடை, உற்பத்தியிலும் விநியோகத்திலும் கிராம மக்களுக்கு பூர்ண சுதந்திரம் இருக்க வேண்டும். பண்டமாற்று முறையைக் கைக்கொண்டு கிராம சுயதேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள, கைத்தொழில், சமூக, பொருளாதாரப் பிரச்னைகளைச் கவனித்து சுதந்திரமாக நடக்க கிராம மக்களுக்குத் தனி அரசியல்முறை அமையவேண்டும்.

நமக்குள் போலி கௌரவமும், மாச்சரியமும் பொறாமையும் வளர்ந்துவிட்டது. தேச உழைப்பு கேவலம் என்று எண்ணும் ரீதியில் நமது வாலிபர்கள் வாழ்கிறார்கள். கூட்டுறவு முறையில் ஒரு குடும்பம்போல ஒவ்வொரு கிராமமும் வாழவேண்டுமென்றால் போட்டியும் பொறாமையும் போலிக் கௌரவமும் ஒழிய வேண்டும். தேச உழைப்பின் அவசியத்தை எல்லோரும் உணரவேண்டும்.

எந்தத் தொழிலேற்றாலும் மனச்சாட்சிக்கு விரோதமின்றி நடந்தால் ஈனமில்லை என்று காந்தியடிகள் போதித்து வருகிறார். சாதிப் பிரிவினையை மறந்து, ஆசிரம வாசிகள் தோட்டி வேலைகூட செய்யவேண்டுமென காந்தியடிகள் கட்டளையிட்டார். இன்றுகூட தோட்டிவேலை புனிதமானது என்பதை அவர் போதித்துவருவதுடன் தன்னையும் ஒரு தோட்டியென்றே சொல்லிக் கொள்கிறார்.

சமூக ஊழியத்தில் அசங்கியமும் அலுப்பும் கிடையாது; ஏற்றத் தாழ்வுக்கும் இடமில்லை. அகங்காரத்தை விட்டு சேவை ஒன்றையே பிரதான லக்ஷியமாகக்கொண்டு ஒவ்வொருவரும் வேலைசெய்து வாழவேண்டும். பிராமணர்கள் மீண்டும் சமூகத்தில் தங்களுக்குள்ள உயரிய ஸ்தானத்தைப் பெறவேண்டுமென்றால் முன்காலத்திலிருந்தது போல சமூகத்தைத் திருத்தியமைக்கப்பாடுபடவேண்டும். சமூகத்திலிருக்கும் குறைபாடுகளை நீக்கித் 'தோட்டி'வேலை செய்ய முன்வரவேண்டும். பிராமணர்கள் சுயநலமற்ற சேவகர்கள். அவர்கள் தமது சேவைமூலம் மீண்டும் அந்த ஸ்தானத்தைப்பெற முயலவேண்டும்.

பிறப்பினால் பிராமணன் உயர்ந்தவன் என்றோ மற்ற சாதியினர் தாழ்ந்தோர் என்றோ இருக்கும் நினைப்பு மாறவேண்டும். காந்திஜியின் வாழ்க்கையில் நேர்ந்த ஒரு சம்பவம் மக்களுக்கு விழிப்பூட்டும் என்றே எண்ணுகிறோம். ஒரு ஊரில் காந்திஜிக்கு வரவேற்பளிப்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதில் தமது சேவையினால் அவர் உயரியப் பிராமணனைப்

போன்ற வாழ்க்கை நடத்துவதாகக் குறிப்பிட்டுப் போற்றப் பட்டிருந்தது. காந்திஜி அதற்குப் பதில் சொல்லும்போது தாம் ஊழியனுகவே வாழ விரும்புவதாகவும் தன்னைப் பிராமணன் என்று குறிப்பிடுவதற்குப் பதில் சூத்திரன் எனக் குறிப்பிட்டிருந்தால் சந்தோஷமடைவதாகவும் சொல்லிவிட்டு, சமூக சேவையில் சூத்திரனின் சேவைதான் உயர்ந்தது, அவனது உழைப்பினுல்தான் சமூகமே வாழ்கிறது என்றும் குறிப்பிட்டார்.

மற்ருெருசமயம், காந்திஜி பிரார்த்தனையின்போது தாம் மறுபிறப்பு எடுப்பதாக இருந்தால் தீண்டாதவனுகவே பிறக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பேன் என்று கூறினுர். பிறப்பினுல் ஏற்றத் தாழ்வு இல்லை என்பதை காந்திஜி திடமாக எண்ணுகிருர். சமூகத்தில் ஒவ்வொருவனும் செய்யும் வேலையைப் பொறுத்தே அவனது அந்தஸ்தும் சேவையும் பரிணமிக்கிறது. சமூகத்திற்குச் சிறந்த ஊழியர்கள் தீண்டாத மக்களும், சாதாரண விவசாயிகளும் தான். ஆனுல் அவர்களுக்கு இன்று சமூகத்தில் இருக்கும் அந்தஸ்து பரிதபிக்கத்தக்கது. இந்த நிலை மாறத்தான் காந்திஜி பாடுபட்டுவருகிருர். சமூகத்தைத் திருத்தியமைக்க முதற்படியாக நாம் இந்த ஏற்றத்தாழ்வு உணர்ச்சியை அகற்றவேண்டும். ஜாதிப்பிரிவினை காட்டி நாம் மக்களை ஒதுக்கிவைத்தல் கூடாது. எல்லோரும் சமம் என்று போதிப்பதுடன் நின்றுவிடுதல் போதாது. பிராமணன் தனது ஜாதியினுல் ஏற்பட்ட மமதையை அகற்றிவிட்டு சமூக ஊழியம் ஏற்பதும் போதாது. பிறப்பினுல் முக்திமார்க்கம் தடைபடுவதில்லை. பஞ்சமன் மற்ற நான்கு மேற்சாதியனுக வரிசைக்கிரமமாகப் பிறந்து முக்தியடைவதில்லை. ஆகவே எல்லா ஹிந்துக்களும் மத சம்பிரதாயங்களிலும் சம உரிமை பெற வழி காட்டவேண்டும். ஜாதியின் பேரால் அனுஷ்டானங்களில் யாருடைய உரிமையையும் பறிமுதல் செய்யக்கூடாது.

## பொதுவுடமை

அடுத்தபடியாக் பழங்காலத்தில் அனுஷ்டானத்திலிருந்த கூட்டுறவு சொத்து உரிமை மீண்டும் ஏற்பட நாம் முயல வேண்டும். பழங்காலத்தில் தனி நபர்கள் சொத்து வைத்துக் கொள்வதில்லை. நிலபுலன்கள் கிராமத்தின் பொது சொத்

தாக இருக்கும். இந்த கிராமப் பொது உடமைக்கு 'சமுதாய ஸ்வஸ்தியா' என்று பெயரிடப்பட்டிருந்தது. இன்று ருஷ்யாவில் அமலிலிருக்கும் பொதுவுடமை தத்துவம் தொன்று தொட்டு நம் நாட்டுக்கிராமங்களில் அனுஷ்டானத்திலிருந்து வந்தது. சுயநலப்பற்றும், சொந்த ஆஸ்தியும் மாறி, நிலபுலன்களும் இதர ஆஸ்திகளும் கிராமத்தின் பொதுவுடமையாக மாறி விட்டால், ஏழை பணக்காரன் என்ற பேதம் மறைந்துவிடும். ஏழை பணக்காரன் என்ற பேதம்தான் சமூக வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைபோட்டு நிற்கிறது. சுயநலம், மாத்சர்யம் முதலிய தீக்குணங்களுக்கு இந்த வித்யாசம் தான் அடிப்படையான காரணம். பொதுவுடமைத் தத்துவம் அமலுக்கு வந்துவிட்டால் கிராம அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதும், சுயதேவைத் திட்டம் வகுத்து வெற்றிபெறுவதும் மிகவும் சுலபம்.

அதிகாரப்பற்றும், சுயநலமும், சொத்துரிமையும் அகற்றி விட்டால், மக்களுக்கு இருக்கும் பதவிமோகம் நீங்கிவிடும். சமூக க்ஷேமத்தில் சிரத்தையுடைய அறிவாளிகள்தான் பதவி ஏற்க முற்படுவார்கள். தற்காலத்தில் தேர்தல்களில் நடக்கும் சூதும், சூழ்ச்சியும், ஆவேசமும் பின்பு தேர்தலில் காணமுடியாது. பதவி ஆசைக்கோ, பண ஆசைக்கோ யாரும் பஞ்சாயத்தில் பதவி வகிக்கமுடியாது. ஆகையால், பொறுப்புள்ள சமூக ஊழியர்கள்தான் நிர்வாகத்திலிருப்பார்கள்.

நிஷ்காம்யமாகப் பதவி ஏற்று ஊழியம் செய்ய முற்படுபவர்களிடம் தீக்குணங்களைக் காணமுடியாது. மனச்சாட்சிக்குப் பயந்து அவர்கள் சேவை செய்வார்கள். நீதி நெறி தவறாது அரசுசெய்யும் அரசனுக்குக்கூட நரகதரிசனம் உண்டு என்பது பெரியோர் வாக்கு. ஆகவே சுயநலப் பற்றற்று நிர்வாகப் பொறுப்பேற்றுள்ள ஊழியர்கள், நடுநிலை தவறாது மனச்சாட்சிக்கும் தெய்வத்திற்கும் பயந்து தமது கடமையை நிறைவேற்றுவார்கள்.

இன்றுகூட நாம் தேர்தலுக்கு நிற்கும் அபேக்ஷகர்களிடம் இந்தக் கொள்கையைப் பரீட்சித்துப் பார்க்கலாம். சொத்துரிமையில் பற்றுள்ளவர்கள் தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்றோ, நிர்வாகப் பதவி ஏற்பவர்கள் சொத்துக்களைப் பரித்யாகம் செய்துவிட வேண்டுமென்றோ விதி ஏற்படுத்தலாம். "உரிமைகளையும் உடமைகளையும் பரித்யாகம் செய்யுங்கள். சிலுவையை ஏற்று என்பின்னே வாருங்கள்" என்கிறார் ஏசுநாதர். சுயநலத்

தைவிட்டு, பற்றற்ற வாழ்க்கை நடத்துபவனால்தான் நேர்மையான நிர்வாகம் செய்யமுடியும். ஸ்மிருதிகளைச் சிருஷ்டித்துக் கொடுத்த நமது பெரியோர்கள் சர்வசங்க பரித்யாகம் செய்த ஞானிகள். அதனால்தான் தனித்துநின்று தீமையை விலக்கி நன்மையை எடுத்துக்காட்டும் சக்தி அவர்களுக்கு ஏற்பட்டது.

இன்று சட்டசபைத் தேர்தலுக்கும் பிற தேர்தலுக்கும் நிற்பவர்கள் எம்மாதிரிப் பட்டவர்கள்? சுயநல நோக்குடையவர்களும், பணக்காரர்களும்தானே நிற்கிறார்கள்! சிலசமயத்தில் (ஜனநாயகத்தின்பேரால்) நேர்விரோதமான நோக்குடைய அபேக்ஷகர்கள் சட்டசபையில் வந்துவிடுகிறார்கள். தொழிலாளி—மில் முதலாளி, ஜமீன்தார் — சாதாரண விவசாயி என்று மாறுபட்ட நோக்கங்களும் நலன்களும் உள்ளவர்கள் மக்களின் பிரதிநிதியாக சட்டசபையை அலங்கரிக்கிறார்கள். இவர்களால் மக்களுக்குக் கிடைக்கும் பலன் பூஜ்யம்தான். சொந்த நோக்குடன் தேர்தலில் நின்று வெற்றிபெற்றவர்கள் தமது செல்வாக்கினால் கோரிய லாப மடைந்துவிடுகிறார்கள்.

நல்லவேளையாக இந்த வித்யாசங்கள் மாறிக்கொண்டே வருகின்றன. தம்தம் சமூக, கட்சி நலனுக்காகப் பிரதிநிதிகள் போராட முற்பட்டுவிட்டதால் தீமை குறைந்துவருகிறது. ஆனால் பாதுகாப்பு என்னும் பசப்பினால் எல்லோரையும் திருப்திப் படுத்தி ஒற்றுமையை ஸ்தாபித்து நாட்டின் முன்னேற்றத்திற்கான வேலைகளைச் செய்வதில் சிரமம் இருக்கத்தான் இருக்கிறது. சுயநலப் பற்றுடன் சட்டசபைக்கு வந்துள்ள இந்தப் பிரதிநிதிகள் நிறைவேற்றும் சட்டங்களால் சமூகம் பயனடையும் என்று எண்ணுவது தவறு. சுயநலமுள்ளவர்களால், பற்றற்று நடக்கவோ, நேர்மையாக நீதி வழங்கவோ, சட்டம் வகுக்கவோ முடியாது. ஆகவே, அறிவாளிகளும், பொதுநல நோக்குடையவர்களும்தான் நிர்வாகப் பதவி ஏற்கவேண்டும்.

ஆளும்திறமையைப் பொறுத்துத்தான் ஆட்சிமுறையும் அமையும். நேர்மையும் தூய்மையும் நிறைந்தவர்கள் அதிகாரத்திலிருந்தால் கிராம அரசியல் சபைகள் தனிச் சோபையுடன் விளங்கும். சுயநலமுள்ளவர்கள் அதிகாரத்தில் வந்தால் ஊழல் மலிந்து நிர்வாகம் சீர்கெடும். பொதுவுடமைத் தத்துவத்தை வற்புறுத்தினால் (ஓரளவு) சுயநலப்பற்றை எதிர்த்து நிற்க முடியும்.

சொத்துள்ளவர்கள் தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்றும், சொத்துரிமையில் ஆசையுள்ளவர்களும் நிற்கக்கூடாது என்றும் சட்டமியற்றவேண்டும். பணக்காரர்கள் அதிகார ஆசை கொண்டு தேர்தலுக்கு நிற்க விரும்பினால் தங்களுடைய ஆஸ்தியை தர்ம ஸ்தாபனங்களுக்கு எழுதி வைத்துவிட்டு பொதுஜன ஆதரவில் வாழ முன்வரவேண்டுமென்ற கட்டுப்பாடு செய்ய வேண்டும். பொதுஜன ஆதரவுக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்கள் தான் இந்த நியதிக்குக் கட்டுப்பட்டு துணிந்து முன்வர முடியுமாகையால் அவர்களது நேர்மையும் சேவையும் சம்சயத்திற்குப் புறம்பானது.

இன்று நமது அரசியல், சமூக வாழ்க்கையில் செல்வாக்குப் பெற்றுள்ளவர்கள் பணக்காரர்கள் தான். தங்கள் பணத்தைத் துர்விநியோகம் செய்து, பாமர மக்களின் ஆயுதமான 'வோட்'டைப்பெற்று ஜில்லா போர்டுமுதல் சட்டசபைவரையுள்ள எல்லா ஸ்தாபனங்களையும் கைப்பற்றிக்கொண்டு சொந்த நலன்களுக்காக அதிகாரத்தையும் பலத்தையும் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். தூய்மையும் சர்வசங்க பரித்யாகமும்தான் தேர்தல் அபேக்ஷகருக்குப் பிரதானமானது என்று வற்புறுத்தினால் இந்தத் தீமையகன்றுவிடும். பொதுவுடைமையும், தூய்மையான நிர்வாகமும் ஏற்பட்டுவிட்டால் நாடு அதிசீக்கிரத்தில் சுபிக்ஷமடைந்துவிடும்.

## சுயதேவைத் திட்டம்

பொதுவுடைமை, நிர்வாகம் இவற்றிற்கு அடுத்தபடியாக சுயதேவைத்திட்டம் பிரதானமானது. ஒவ்வொரு அம்சத்திலும் கிராமம் தனது தேவையைப் பூர்த்திசெய்துகொள்ளும் நிலைமையில் திட்டம் வகுக்கவேண்டும். அங்கு விற்பனையுமில்லை, வாங்குவோருமில்லை என்ற நியதி இருக்கவேண்டும். மக்கள் தமது கிராமத்தின் தேவை போக எஞ்சியதை விற்பனைக்குக்கொண்டுவரவேண்டும். அதுவும் தமக்குத்தேவையானப் பொருள்களுக்காக பண்டமாற்று முறையில் மாற்றிக்கொள்ளவேண்டும். நாணயச்செலாவணியினால்தான் வியாபாரம் பெருகி சுரண்டலும் சூழ்ச்சியும் வளருகிறது.

உணவு உற்பத்தியிலும்கூட, தானிய உற்பத்திக்கும், சம்பாரப்பொருள் உற்பத்திக்கும், கால்நடைமேய்ச்சலுக்காகவும், கிராம நிலத்தைப் பிரித்துக்கொண்டு சாகுபடி செய்யவேண்டும்.

வெளிநாட்டு வியாபாரமும் காகித நாணயமும், யந்திர சாதனக் கைத்தொழிலும் அதிகரித்துவிட்ட இந்நாளில் விவசாயிகள் பணம் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு மேய்ச்சல் நிலத்தைக்கூட உழுது, புகையிலை, கடலை, கரும்பு முதலிய வியாபாரப் பொருள்களை சாகுபடிசெய்யத் துணிந்துவிட்டனர். இந்த நிலைமை மாறவேண்டும்.

கரும்பு, கடலை, புகையிலை இவைகளைச் சாகுபடி செய்வதில் கைநிறையப் பணம் கிடைக்கிறது என்ருலும், உணவு தானியத்திற்கு கிராமவாசி பிறர்கையை எதிர்பார்க்க வேண்டிய நிலைமை தானே ஏற்பட்டுவிடுகிறது! அந்த விளைபொருள்களுக்கும் சாகுபடிச் செலவைக் கணக்கிட்டு விலை வைக்கப்படுவதில்லை யாகையால், நிரந்தரமான லாபம் கிடைக்குமென்பதற்கில்லை. தவிர கரும்பு ஆலையின் தேவைக்காக கரும்பு சாகுபடி செய்பவன் காசைக் கைநிறைய வாங்கினாலும், ஆலையின் ஆணையேற்று சாகுபடி செய்யும் கூலியாகவே மாறிவிடுகிருன்.

உணவுப்பொருள்களைவிட, கரும்பு முதலிய சாகுபடியில் லாபம் கிடையாது. உணவுதானிய உற்பத்தியிலும் கிராமமக்களுக்குள் ஐக்ய உணர்ச்சியிருக்க வேண்டும். மிராசுதார் உற்பத்தியாகும் தானியத்தைக் கட்டுப்படுத்தி போகவாழ்வு வாழ்ந்து, ஆண்டுமுழுவதும் பாடுபட்ட சேரிமக்களைப் பட்டினி போடும் நிலைமை மீண்டும் நேரக்கூடாது. உணவு தானியத்தைக் கட்டுப்படுத்தி, கிராம மக்களின் தேவையைக் கணக்கிட்டு சேமித்து எஞ்சுவதைத்தான் விற்பனைக்குக் கொண்டு வரவேண்டும்.

உணவுக் கட்டுப்பாடுபோல, உடையிலும் ஒவ்வொரு கிராமமும் தம்தம் தேவையை சமாளித்துக்கொள்ளவேண்டும். வருஷாந்திரத்திற்கு தம்தம் குடும்பத்திற்குத் தேவையான ஆடைகளுக்குப் போதுமான நூல் நூற்க ஒவ்வொரு கிராமவாசியும் முற்பட வேண்டும். நூற்ற நூலை உள்ளூர் நெசவுகாரனிடம் கொடுத்து நெய்துகொள்ளவேண்டும். 'கதர் விற்பதும் பாவம், வாங்குவதும் பாவம்' என்று காந்திஜி ஒரு சமயம் குறிப்பிட்டுள்ளார். நமது மானத்தைக்காக்க பிறர் கையை எதிர் பார்ப்பதே பாவம்.

உணவும் உடையும் தட்டின்றி மனிதனுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்துவிட்டால் குற்றங்களும் கொடுமைகளும் குறை

யும். தேவையைச் சமாளிக்கத்தானே திருட்டு நடக்கிறது? பசியாற உணவும் அரைநிறைய ஆடையும் மனிதனுக்குக் கிடைத்துவிட்டால் தீமைக்குணம் பலமிழந்து மடியும்.

தற்காலச் சட்டப்படி, ஒருவன் உணவுக்காக ஒருபடி அரிசியைத் திருடினால் நாலுமாதம் சிறைவாசம் கிடைக்கிறது. ஆனால் ஒரு பணக்காரன் நூற்றுக்கணக்கான ஏகரா நிலத்தை ஸ்வீகரித்துக்கொண்டு, ஏழைமக்களின் உழைப்பால் வண்டிக்கணக்காக தானியத்தை உற்பத்தி செய்து, அவர்களைப் பட்டினி போட்டு அவ்வளவு தானியத்தையும் தன்னுடையது என்று ஸ்வீகரித்துக்கொண்டால் (திருடிக்கொண்டால்) அது குற்றமாகாது.

பழைய காலத்தில் தேவைக்கதிகமாக பொருளைச் சேமிப்பவன் குற்றவாளியாகக் கருதப்பட்டான். அந்த மனோபாவத்தை நாம் இன்று கைக்கொள்ள வேண்டும். தேவையைப் பூர்த்தி செய்து மனிதனுக்கு சுகவாழ்வு கொடுத்தால் குற்றம் கொலைகள் அற்றுப்போய் விடுவதுடன், பெரிய நீதி ஸ்தலங்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும் இடமேயில்லாது போய்விடும்.

இவ்வளவும் ஏற்பட்டுவிட்டால் கிராமத்தில் சுபிக்ஷம் தாண்டவம் ஆடுமா என்று கேட்கலாம். மனிதனை மடையனாக்குவது இன்றைய நாணயச் செலாவணிதான். நாணயம் என்பது மாயமான். அதற்கு மதிப்பே கிடையாது. ஆளும் வர்க்கம் ஊட்டிய மதிப்பால் அது மக்களை ஆட்டிவருகிறது. சுதந்தரக் கிராம அமைப்பில் காசுக்கு மதிப்பில்லை. மனிதனை மனிதன் மதித்துவாழும் நிலைமை ஏற்படும்போது ஏழை, பணக்காரனென்ற கற்பனை வாழ்வை சிருஷ்டிக்கும் காசுக்கு மதிப்பு இருக்காது.

உடலுழைத்துப் பாடுபடும் மனிதனை கௌரவிக்கவேண்டும். அவனது உழைப்புக்கு மதிப்பும் மரியாதையும் தரவேண்டும். எல்லோரும் சமம் என்று எண்ணும்போது ஏற்றத்தாழ்வே இராது. கிராம நிர்வாகிகள் மக்களுக்கு வேலையைப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். ஒவ்வொருவரும் தமது வேலையைப் பூர்த்தி செய்தால்தான் சமூகம் க்ஷேமமடையும் என்று எண்ணவேண்டும்.

சுண்டி எண்ணும் நாணயமோ கட்டுக் கட்டாக இருக்கும் காகித நோட்டோ, சுபிக்ஷத்தைத் தரா. மனிதனும்

மாடும், இரவு பகலாக, வெயில், மழை என்று பாராது உழைத்த உழைப்பின் பலனை பூமிதேவி கருணையுடன் தானியத்தை அள்ளிக் கொடுக்கிறாள். மனித உழைப்பின் பலன்தான் அதே தவிர காசு கொடுத்து வாங்கும் செயல் அல்ல. ஆகவே உண்மையான மதிப்பு தேக உழைப்பே தவிர காசல்ல. காசு மனித சிருஷ்டி. வெறும் காசினால் மட்டும் தானிய விளைச்சலைக் காண முடியாது.

மனித உழைப்பை மதித்துப் போடக்கும் காலம் வந்துவிட்டால் காசால் ஏற்படும் போலிக் கௌரவம் வீழ்ந்துவிடும். ஒவ்வொருவரும் சுயதேவை வாழ்க்கை நடத்த முற்பட்டால் உபரியாக இருப்பதைத் தேவைப்பட்டவர்களுக்குக் கொடுத்துத் தனக்கு வேண்டிய பொருளை மாற்றிக்கொள்ளலாம். மனித உழைப்பை நாணயமாகச் செய்து விடுவதால் பண்டமாற்று முறையில் வியாபாரம் சுலபமாகிவிடும். ஒவ்வொருவனும் தனது உழைப்பின் மதிப்பை உணர்ந்துவிடுவதால் அதிரடித்து வாங்கும் நோக்கத்திற்கோ சுரண்டல் திருஷ்டிக்கோ இடமிராது.

சுயதேவைத் திட்டம் அமலுக்கு வந்துவிட்டால் நாட்டின் ஜீவனை உறிஞ்சும் ஏற்றுமதி வியாபாரம் படுத்துப்போகும். காசின் மதிப்பு வீழ்ந்துவிடுவதால், மக்களின் ஆடம்பரமோஹம் குறைந்துவிடும். தேவை என்பது அற்றுவிடுவதால் குற்றமும் கொலையும் மறைந்துவிடும். குற்றமும் கொலையும் வழக்கும் அற்றுவிட்டால் பெரிய நீதிசபைகள், வியாபாரத்தரகர்கள், வக்கீல்கள், பாதுகாப்புப் படை, இத்யாதி அம்சங்கள் எல்லாம் குறைந்துவிடும். அதிகாரத்தின் தலைநகரம் மாறிவிட்டால் தினே தினே பெருகிவரும் நகரங்களும் மறைந்து, மீண்டும் தனித்தனியாக வாழும் சுதந்தரக் கிராமங்கள் தோன்றும்.

# சுதந்திரத்திற்கு வழி

நாம் எம்மாதிரிக் கிராமங்கள் அமையவேண்டும் என விரும்புகிறோம்? கிராம அமைப்பையும் விரும்பும் மாறுதல்களையும் பற்றி இதுவரை விவரித்தோம். எம்மாதிரி இருக்க வேண்டுமென்ற திட்டம்பற்றி இனி ஆராய்வோம். இந்தத் திட்டத்தில் குறைபாடுகளிருக்கலாம். யோசனை தான் இது. எல்லாரும் ஆய்ந்து விவாதிக்க வேண்டிய விஷயம் தான் இது.

ஏற்கனவே கூறியபடி (1) பொதுவுடமை, (2) சமூகசேவை (3) சுயதேவை, (4) மனித உழைப்பிற்குக் கௌரவம் (5) பண்டமாற்று முறையில் வியாபாரம் என்னும் இந்த கொள்கைகளின் அடிப்படையில் நாம் கிராமப் புனருத்தாரணத் திட்டத்தை அமைக்க வேண்டும்.

## பொதுவுடமை:

எல்லாச் சொத்தும் கிராமத்தின் பொதுவுடமையாகச் செய்யவேண்டும். தனிப்பட்ட பணக்காரனின் ஆதிக்கமே அங்கு இருக்கக்கூடாது. பயிரிடும் நிலங்கள், மேய்ச்சல் தரிசு, தெரு, வீடு, ஏரி, குளம், கிணறு, காடு, கரம்பு முதலிய எல்லாம் பொதுக்குடி சொத்தாகத்தானிருக்க வேண்டும். இவை கிராம அரசியல் சபையின் நிர்வாகத்திலிருக்கவேண்டுமே தவிர தனிப்பட்ட ஸ்வான்தார் யாருமே கூடாது.

யந்திர சாதனங்களால் உலகிலேயே பெரும் மாறுதலேற்பட்டிருக்கும்போது யந்திர சாதனங்களின்றியே நாம் வாழ்வது இயலாத காரியம். ஆகவே (மனித உழைப்பை உபேக்ஷிக்காத) பெரும் கைத்தொழில்களை மட்டும் ஏற்றுக்கொண்டு, அவற்றையும் முதலாளித்வ ஆதிக்கமின்றித் தேசியச் சொத்தாக்கிவிட வேண்டும். அவை மதய, மாகாண சர்க்கார்களின் ஆதிக்கத்திலிருக்கலாம்.

## கிராம சபை

வயதுவந்த எல்லா கிராமவாசிகளும் கிராம சமுதாயத்தில் அரசியல் சபையில்-உரிமை யுள்ளவர்கள் தான்.

ஐந்து வருடத்திற்கு ஒருமுறையோ, அல்லது யுக்தம் போலோ கிராமவாசிகள், கிராம நிர்வாகத்திற்காக, தமக்குள் ஐவரை, ரகசிய 'வோட்' முறைமூலம் தேர்ந்தெடுக்க வேண்டும். கிராமப் பொதுச் சொத்துக்களை நிர்வகிக்கவும், தனிப்பட்ட நபருக்கோ, சங்கத்திற்கோ குறிப்பிட்ட காரியத்திற்காக ஆர்ஜிதம் செய்துகொடுக்கவும் கிராம சுபிக்ஷத்திற்கான இதர நிர்வாகங்களிலும் பரிபூரண உரிமையும் சுதந்தரமும் அந்தப் பஞ்சாயத்தாருக்கு உண்டு.

கிராமத்தில் வசிக்கும் எல்லாச் சாதியினரும், தொழிலாளரும் வித்யாசமின்றி தம்தம் பிரதிநிதிகளை பஞ்சாயத்தாராக நிறுத்த உரிமையுண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்தார்கள், கிராம நிர்வாகத்துடன் தமக்குள்ள சேவையும் செய்துவரக் கடமைப்பட்டவர்கள். பொதுஜன சேவைக்குப் பிரதிப்பிரயோஜனம் கருதாது அவர்கள் பணியாற்றல் வேண்டும்.

## சுயதேவை

வருட ஆரம்பத்தில் பஞ்சாயத்தார், அந்த ஆண்டு கிராமமக்களுக்கு வேண்டிய உணவு, எதிர்பாராதபடி பஞ்சம், வெள்ளம், காய்ச்சல் முதலிய நேரிட்டால் அதற்கும் சமாளிக்க தானியம், முதலியன கணக்கிட்டு தானிய உற்பத்திக்காக நிலத்தைப் பங்கிடவேண்டும். உணவு தானியம், பயறு, மாட்டுத்தீவனம் என்று கிராமத்தேவைகளை பல்வேறு பகுதிகளாகப் பிரித்து சாகுபடி செய்யவேண்டும்.

இயற்கை பொய்த்து எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டால் தானியக் குறைபாட்டை சமாளிக்க கிராமப் பஞ்சாயத்தார் அண்டை அயலிலுள்ள கிராமத்தாருடன் பேரம் நடத்தி தங்களிடமிருக்கும் உபரிப் பொருள்களுக்கு பண்ட மாற்று முறையில் வியாபாரம் நடத்தி நிலைமை சமாளிக்க வேண்டும்.

உணவு தானியத்திற்கு அடுத்தபடியாக ஆடைக்கு வேண்டிய பருத்தி சாகுபடி பற்றியும் கணக்கெடுத்து தேவைக்கேற்ப சாகுபடி செய்யவேண்டும். ஒவ்வொரு கிராமவாசியும் நூல் நூற்று உள்ளூரிலேயே நெசவுசெய்துகொள்ள வேண்டும்.

பரஸ்பர ஒத்துழைப்பின்மேல்தான் இவை சாத்தியமாகும். இதைத்தவிர எத்தனையோ சிறு கைத்தொழில்களை கிராமவாசிகள் லாபகரமாக நடத்தமுடியும். உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருளுக்கேற்ப, அங்கேயே கைத்தொழிற்சாலைகளை

நிருவிக்கொண்டு, உற்பத்திப் பொருள்களை, பிற கிராமங்களுக்கு அனுப்பித் தங்கள் தேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மூலப்பொருள்களையும் தொழிலையும் கிராமப் பஞ்சாயத்து பரிசிலனை செய்து திட்டம் வகுத்துச் செய்யவேண்டும். சமூக நலனுக்கேற்பட்ட ஜீவாதாரமான சேவைகள் தவிர இதர சேவைகளுக்கு மக்களை இச்சாபூர்வமாகச் சேர்க்க வேண்டுமே தவிர கட்டாயசேவை கூடாது. மத சம்பிரதாயங்களிலும், சடங்குகளிலும் மக்களுக்கு, சிந்தனை உரிமையும் சுதந்திரமும் இருக்கவேண்டும்.

தேகபலம், இச்சை, அபிப்பிராயம், சக்தி, அறிவு இவைகளுக்கேற்ப சமூக வேலைகளைப் பங்கிட்டுத் தரல்வேண்டும். எதேச்சாதிகாரமோ கட்டாயமோ இருந்தால் ஒற்றுமைக் குறைவும் திறமைக் குறைவும் ஏற்பட்டுவிடும். இச்சாபூர்வமாக மக்களுக்கு வேலையிட்டாலும் அடிக்கடி மாறுதலிருக்கக்கூடாது. சமூக நலனுக்காக விசேஷ காலங்களில் கட்டாயசேவை கொடுக்கும் உரிமையும் பஞ்சாயத்தாருக்கு இருக்கவேண்டும்.

கிராம நிலத்தில் மேய்ச்சலுக்கு என்று ஒரு பகுதி ஒதுக்கி வைத்த பின்புதான் சாகுபடிசெய்ய வேண்டும். விவசாயத்திற்கென ஒதுக்கிய நிலங்களை, விவசாயத்திலீடுபட இச்சாபூர்வமாக முன்வரும் மக்களுக்கு, சரிசமமாகப் பிரித்துக்கொடுக்கவேண்டும். பஞ்சாயத்தார் தீர்மானப்படி விவசாயிகள் சாகுபடிசெய்ய வேண்டும்.

உணவுத்தேவைக்கு வேண்டிய நிலம்போக மிகுதி நிலத்தில்தான் இதர சாகுபடி செய்யவேண்டும். கூட்டுப்பண்ணை முறையிலோ, தனித்தனியாகவோ கிராமவாசிகள் வசதிக்கேற்ப விவசாயத்திலீடுபடலாம்.

## பொது சொத்து

விவசாயிகளுக்குத் தாம் பயிரிடும் நிலத்தை அனுபவிக்கும் உரிமைதான் உண்டே தவிர அதைப் பந்தகப்படுத்தவோ பராதீனப்படுத்தவோ உரிமை கிடையாது. நிலத்தின் ஸ்வான்தார் கிராம சபைதான். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு விவசாயிகளிடமிருந்து நிலத்தை மாற்றவோ திருப்பிக்கொடுக்கவோ கிராம சபைக்கு உரிமையுண்டு.

நிலத்தைக் காம்பாகப் போட்டாலோ அசட்டையினால் சரிவரச் சாகுபடி செய்யாவிட்டாலோ, விவசாயிடமிருந்து

நிலத்தை மீட்டுக்கொள்ளும் உரிமை கிராமசபைக்கு உண்டு. திறம்பட வேலைசெய்து நல்ல மகசூல்காட்டும் விவசாயியிடமிருந்து அனாவசியமாக பஞ்சாயத்தார் நிலத்தை வேறு யாருக்கும் மாற்றவும் கூடாது.

நிலத்தின் தராதரத்தைப் பொறுத்து அதிகமாகவும் குறைவாகவும் மக்களிடம் பங்கீடு செய்யும் உரிமை கிராம சபைக்கு உண்டு.

## வரியும் பங்கீடும்

உற்பத்தியாகும் தானியத்தை இரண்டுவிதமாக கிராம மக்களுக்குப் பங்கிடலாம். ஒவ்வொரு விவசாயியும் மகசூலில் ஒரு பகுதியை கிராம நிர்வாகத்திற்காகக் கொடுத்துவிட்டு, தனது குடும்பத்தேவைக்கும் வேண்டியதை எடுத்துக்கொண்டு மிகுதியை கிராம சபையின் அனுமதியின்பேரில் வேறு கிராமங்களுக்கு ஏற்றுமதி செய்யலாம். விவசாயிகளல்லாத கிராமவாசிகளின் தேவைபோக மிகுதியிருந்தால்தான் ஏற்றுமதி செய்ய கிராம சபை அனுமதி கொடுக்கலாம். வேறொரு விதமாகவும் பங்கீடு செய்யலாம். கிராம சபையே எல்லா மகசூலையும் ஸ்வீகரித்துக்கொண்டு பாடுபட்ட விவசாயிக்கு அவனது ஆதாயச்செலவு கணக்குகளைப் பரிசீலனை செய்து குடும்பத் தேவைக்குப் படியளக்கலாம்.

இந்த இருமுறையில் எது காரிய சாத்தியமானதோ அதை யுக்தம்போல அனுஷ்டிக்கவேண்டும். கிராமத்திலுள்ள உபரி தானியத்தை கிராம சபையின் நிர்வாகத்தில் பொதுச்சேமிப்பாகக் கட்டிவைக்க வேண்டும்.

கிராமவாசிகள் பொதுச் செலவிற்காக கிராமசபைக்குக் கொடுக்கும் மகசூல் பகுதியை மாகாண, மத்ய சர்க்காருக்கு வரிப் பணம் கொடுக்கவும், வண்ணான், அம்பட்டன், தச்சன், கருமான், கைக்கோளன், கணக்கன், தலையாரி, வெட்டியான் முதலிய கிராம சேவகர்களின் ஊதியத்திற்காகவும், அசக்தர்கள், வயோதிகர்கள் முதலியவர்களின் சம்ரக்ஷணைக்காகவும், கல்வி, ஆஸ்பத்திரி, திருவிழா முதலிய கிராமப் பொதுச்செலவிற்காகவும் எதிர்பாராத விபத்துகளைச் சமாளிக்க விசேஷ சேமிப்பாகவும் விநியோகிக்க வேண்டும்.

கிராம ஊழியர்களின் ஊதியத்தில் ஏற்றத்தாழ்வில்லாது விவசாயிக்குக் கிடைக்கும் படித்தனம்போல, குடும்பத்திலுள்ள

நபருக்கேற்ப எல்லாருக்கும் சமமாக தானியம் வழங்கல்வேண்டும். விசேஷ காலங்களில் எல்லா கிராமவாசிகளையும் ஒரு குறிப்பிட்ட வேலையில் ஈடுபடச்செய்யவும் வெளியூர்களிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டுவரவும் கிராம சபைக்கு உரிமையுண்டு.

வயதுவந்த வாலிபர்களுக்குக் கலியாணமானதும் தனியாக வீடு கட்டி குடும்பமேற்படுத்திக்கொடுக்கும் பொறுப்பு கிராம சபைக்கு உண்டு. குடும்பத் தேவைக்கேற்ப எல்லா வீடுகளும் ஒரேமாதிரி அமைப்பது நலம். ஒவ்வொரு வீட்டிற்கும் விசாலமான காலிமனை இருக்கவேண்டும். குடிவசதிக்காக வீட்டை விஸ்தரித்துக்கொள்ள கிராம வாசிக்கு உரிமையுண்டு.

பொது நிர்வாகம், சேமிப்பு, பள்ளிக்கூடம் முதலியவற்றிற்காக கிராம சபை ஊர்ப்பொதுவில் பெரிய கட்டிடங்களையும் நிர்மாணிக்க வேண்டும்.

கிராம சபையின் அனுமதியின்றி எந்தக் கிராமவாசியாவது வெகுகாலம் வெளியூரில் தங்கிவிட்டால் இந்தக் கிராம உரிமையையும் பிரஜா உரிமையும் ரத்தாகிவிடும்.

கிராமம் முழுவதும் ஒரு குடும்பம்; பஞ்சாயத்தார் குடும்பத் தலைவர்கள். குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் வேண்டிய வசதியும் சௌகரியமும் குடும்ப வரவுசெலவும் கவனிக்கும் பொறுப்பு அவர்களைச் சேர்ந்தது. இந்த ஐக்ய மனோபாவம் வளர்ந்து எல்லாரும் ஒன்றாக வாழ்ந்தால் ஒவ்வொரு கிராமமும் ஒரு குடும்பமாகிவிடும். பிறகு பாரத நாட்டில் ஏழு லக்ஷம் குடும்பங்கள் தான் இருக்குமாகையால், தேசத்தின் நிர்வாகமும் சுலபமாகிவிடும்.

மனித சமூகத்தின் பிரதான தேவை உணவும் உடையும் தான். உணவுத் தேவைக்குப் பெரும்பகுதியை பசு தருவதால் கோ சம்ரக்ஷணையில் கிராமமக்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். பால், தயிர் தருவதுடன், விவசாயத்தின் பிரதான தேவையான எருவும்; சாகுபடிக்கு உழவும், பசுவினால் தான் கிடைக்கிறது. சுயதேவைத் திட்டத்தை வற்புறுத்தும்போது, எருவிற்காக வெளியாரின் கையை எதிர்பார்க்கும் நிலைமையிருக்கக்கூடாது. ஆகையால் வீட்டுக்கு ஒரு கறவைமாடு வைத்துக்கொள்ள கிராம சபை ஏற்பாடு செய்வதுடன், கிராமத்திலுள்ள நிலத்தை உழுவதற்குப் போதுமான ஏர் மாடுகளையும் பொதுச்செலவில் நிர்வகிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

சுதந்திரக் கிராமத்தில் தீண்டாமைக்கும் ஜாதிவித்யாசத்திற்கும் இடம் கிடையாது. ஆனால் தொழிலாளரிடையே பரஸ்பர உழைப்பும் ஐக்யபாவமும் ஏற்பட அவரவர் தொழிலுக்கு ஏற்ப தனித்தனி வீதிகளில் கிராமவாசிகள் வசிப்பது நலம். உணவு விஷயத்தில் அதிகக் கட்டுப்பாடு செய்ய முடியாது. ஆகையால், சைவ உணவு சாப்பிடுபவர்களும் மாமிச உணவு சாப்பிடுகிறவர்களும் தனித்தனியாக வசித்தல் உசிதமானது.

பஞ்சமர் என்ற ஜாதி கூடாது என்றாலும், சுதந்திரக் கிராமத்தில் அவர்கள் செய்துவரும் வேலை இருக்கும். ஆகவே, தோட்டி வேலை செய்பவர்களும், சக்கிலித்தொழில் புரிபவர்களும் கிராமத்திலிருந்தாலும் அவர்களைப்பிரித்து வைக்காமல், எல்லாரையும் போல சம உரிமை கொடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரே குடும்பம்போல கிராமவாசிகள் வசித்தாலும் சௌகரியத்தை உத்தேசித்து, ஒவ்வொரு குடும்பமும், சமையலும், நூல் நூற்றலும் தனித்தனியே செய்துகொள்ளுதல் நலம். உணவுக்கு வேண்டிய காய்கறிகளையும் வீட்டுத்தோட்டத்திலேயே பயிரிட்டுக்கொள்ளவேண்டும்.

பருத்தி ஏற்றுமதியையும் வெளியிலிருந்து ஜவுளி இறக்குமதியையும் கிராம சபை அனுமதிக்கக்கூடாது. ஆடைப்பஞ்சம் ஏற்படும்போது ஜவுளியும், விசேஷகால உபயோகத்திற்காக நல்லரக மெல்லிய ஜவுளியும் கிராமத்தில் விற்பனை செய்ய சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு கிராம சபை அனுமதிக்கலாம்.

கறவைமாடுகளும் எர்மாடுகளும் கிராமத்தேவைக்கேற்ப நிர்வகித்து, அவற்றிற்குப் பொதுமேய்ச்சல் ஸ்தலமும் நீர்நிலயமும் ஏற்பாடு செய்யவேண்டும். மாட்டுத்தீவனத்திற்காக உபரியாக சோளத்தட்டை, கினிப்புல், முதலிய பசுந்தாள் உணவுகளை தேவையிருந்தால் பொதுச்செலவில் சாகுபடி செய்து விநியோகிக்கவேண்டும். பசுந்தாள் மகசூலில் மாட்டைவிட்டு மேய்த்துவிடாது, அறுவடைசெய்து எடுத்துக்கொள்ள வீட்டுக்கு வீடு அனுமதிச்சீட்டுக் கொடுத்தல் வேண்டும்.

மாட்டுப்பட்டி என்பது தனியாக இருக்கக்கூடாது என்றாலும், கவனக்குறைவால் விவசாயி கொண்டிமாட்டை மேயவிட்டுவிடாது கட்டுப்பாடு செய்யவேண்டும்.

கலப்பை, நுகத்தடி முதலிய விவசாயக் கருவிகளுக்கும் வீடு கட்டும் மரங்களுக்கும் ஏரிக்கரை, வாய்க்கால் ஓரம், புறம்போக்கு நிலம் இவற்றில் நல்ல மரங்களை வைத்துப் பயிரிட வேண்டும். அவை கிராமப்பொதுச்சொத்து. விவசாயிகளின் தேவைக்கேற்ப அவை வெட்டி விநியோகிக்கப்படவேண்டும். பிரதிவருஷமும் புதுப்புதுமரங்கள் வைத்துப்பயிரிடல்வேண்டும்.

ஐந்து வருஷத்திற்குப்பின்பு எந்த கிராமவாசியாவது விவசாயத்தைவிட்டு வேறுதொழில் செய்ய விரும்பினால் அவனிடமுள்ள விவசாயக்கருவிகளை கிராம சபையிடம் ஒப்பித்துவிட வேண்டும் என்று விதிக்கவேண்டும்.

## சட்டதிட்டங்கள்

ஜாதி சமய சம்பிரதாயங்களுக்குக் கௌரவம் கொடுத்து, அவரவர் பழக்க வழக்கப்படி கலியாணம், சாவு, மதச்சடங்குகள் முதலியன அனுமதிக்கவேண்டும். சொந்த விவகாரங்களிலோ மதசம்பிரதாயங்களிலோ அனாவசியமாக கிராமசபை தலையிடக்கூடாது. மதசம்பந்தமான சட்டங்களில் மாறுதலேற்பட வேண்டியிருந்தால் மாகாண, மத்திய, சர்க்கார் மூலம் சட்டமியற்றப்பட வேண்டுமே தவிர சமூகக்கட்டுப்பாடுகள் மூலம் கிராம சபைகள் அவற்றில் தலையிடக்கூடாது.

எல்லாச் சொத்தும் கிராமப் பொதுவுடைமையாகிவிடுவதால், வாரிசு பாத்யம், விக்கிரயம், பந்தகம் என்னும் தற்காலச் சிக்கல்களுக்கு இடமில்லாமல் போய்விடுகிறது. சோம்பேறித்தனமும் கள்ளச்சேமிப்பும் சமூகத் துரோகமாக எண்ணப்பட்டு தண்டிக்கப்படவேண்டும்.

அசக்தர்கள், அனாதைகள், வயோதிகர்கள், இவர்களுடைய போஷணையைப்பற்றி கிராம சபை விசேஷ கவனம் எடுத்துக்கொள்வதால் எதிர்காலத்திற்கென் தனியாகச் சேமிப்புத் தேவையில்லை. ஆகவே கள்ளச்சேமிப்பு அல்லது அனாவசியச் சேமிப்பைக் குற்றமாகவே கருதப்படவேண்டும்.

உணவும் உடையும் தாராளமாகக் கிடைப்பதனால் வாலிபர்கள் சோம்பித்திரிவதுடன் மமதை கொண்டு வம்புச்சண்டையும் அமைதியின்மையும் ஏற்படுத்த இடமுண்டு. ஆகவே சோம்பேறிதனத்தைக் குற்றமாகப் பாவித்து தண்டிக்கவேண்டும். சோம்பிக்கிடப்பவர்களுக்குப் புதிதாக வேலை சிருஷ்டித்துக்

கொடுத்துக் கிராம வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் பொறுப்பு கிராமசபைக்கு உண்டு.

மற்றும் சில சமூகச் சிக்கல்களைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அபராதம், கசையடி, கோதண்டம் போடுதல், கிட்டி மாட்டுதல், முதலிய தண்டனைகள் சமூகத்திற்கு அவசியம்தானா என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம். தற்காலத்தில் சிறைகளில் இத்தகைய்த் தண்டனைகளில் பல கையாளப்பட்டு வருகிறது.

சோம்பேறியை சமூகத்திலிருந்து பிரித்துவைத்து தண்டனை கொடுக்கும் ரீதியில் சிறைவைத்து வேலைவாங்குவதும் சிந்தனை செய்யவேண்டிய விஷயம்தான்.

அபராதம் போடுதல், சகஜமான தண்டனையாகக் கருதப் படுகிறது. சில கிராமங்களில் தானிய தவிசங்களை அபராதமாக வசூலிக்கும் வழக்கமிருந்து வருகிறது. உழைப்பவனிடமிருந்து உண்ணும் பொருளைத் தண்டுவதே குற்றம். எதிர்கால சமூகத்தில் சோம்பேறிதான் சமூகக் குற்றவாளியாக இருக்க முடியுமாகையால் அவனுக்கு கிராமப்பொதுஉணவில் பங்கில்லை என்று சொல்லிவிடலாம். மற்ற சில்லரைக் குற்றங்களுக்கும் வேறுவிதமான தண்டனை கொடுக்க முற்படவேண்டுமே தவிர அபராதம் போடும் பழக்கத்தைக் கைவிடுவது நலம்.

சமூகக்கட்டுப்பாட்டுக்கு சில வரையறைகளும் தண்டனைகளும் அவசியம்தான் என்றாலும் அவை எம்மாதிரி இருக்கவேண்டும் என்பதை அனுபவ சாத்தியமாக ஆராய்ந்து முடிவு கட்டுவதுதான் நல்லது.

திருட்டு, நில ஆர்ஜிதம் முதலிய குற்றங்கள் நேரிடாமல் சமூக அமைப்புத் திருத்தியமைக்கப்பட்டாலும் எதிர்பாராத படி இந்தமாதிரிக் குற்றங்கள் நடந்தால் வாதிப்பிரதிவாதிகளின் சம்மதத்தின் பேரில் பஞ்சாயத்தார் ஒரு குழுவினரை நியமனம் செய்து நியாயம் வழங்க ஏற்பாடு செய்யலாம்.

## கல்வி

உலகப் போக்கில் அதன் வேகத்தையொட்டி நாம் பழங் காலக் கல்வி முறையைக் கையாளுவதில் சிரமம் இருக்கிறது. தற்காலக் கல்வி முறை பயனற்றது என்று ஒதுக்கி விட்டோம். ஆகவே சிறந்த கல்வி முறையை அனுபவ சாத்தியமாக நாம இனித்தான் வகுத்துக் கொள்ளவேண்டும்.

தற்போது வார்தார் கல்வி முறை பற்றிய பிரச்னைகள் அடிபட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தக் கல்வித் திட்டத்தில் சிறந்த அம்சங்களிருப்பதால் கிராமம்தோறும் ஒரு பள்ளிக் கூடம் ஏற்பாடுசெய்யலாம்.

முதியவர்களுக்கு கல்வி புகட்டவும் பொழுதுபோக்கவும் வாசகசாலைகள் நிறுவுவதுடன் புராண காலட்சேபம் செய்யவும், பஜனை செய்யவும் ஏற்பாடு செய்யலாம்.

ஆரம்பக்கல்வி என்னும்போதே எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி என்பதைத்தான் வற்புறுத்துகிறோம்.

நாம் நவீன காலத்தில் வாழ்கிறோம். மேனாட்டு நாகரிகத்தின் பசப்பை வெறுத்தாலும் சர்வதேச அரசியலில் நாம் கலந்துகொள்ளும் நிலைமையில் தான் இருக்கிறோம். ஆகவே சர்வதேச விவகாரங்களைத் தெரிந்துகொள்ளவும் நாட்டின தற்காப்பு சேவைக்காக ஆயுதப்பயிற்சி பெறவும் வயதுவந்த ஆண் பெண் பாலருக்கு ஒரு பயிற்சி கொடுத்தல் அவசியமாகிறது.

நவீன சாதனங்களைக் கையாளும் பயிற்சியும் அவர்களுக்குப் போதித்தல் வேண்டும். அது சர்க்காரின் வேலை என்றாலும் அதற்கான பூர்வாங்கவேலைகளை கிராம சபைகளால் தான் செய்யமுடியும்.

மாணவர்களுக்கு தேச உழைப்பின் அவசியத்தைப் போதித்து, அதற்கான பயிற்சியும் சிறுவயதிலிருந்தே கொடுக்கவேண்டும்.

கிராமத்தின் பிரதான தேவைகளைத் தவிர பொழுது போக்கு வசதிகளையும், வண்ணான், அம்பட்டன், குயவன், கருமான் முதலிய ஊழியர்களின் நிர்வாகச் செலவையும் கிராமசபை பொது நிர்வாகத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## நகரங்கள்

கிராம பரிபாலனத்தை மட்டும் சொல்லிக் கொண்டே போனால் நகரங்களின் நிர்வாகம் எப்படி நடக்கும் என்ற கேள்வி எழுகிறது. இருக்கும் நகரங்களை நாம் கலைத்துவிட முடியாது. ஆனால் அவையும் சுயதேவைத் திட்டத்தை அனுஷ்டிப்பது சுலபம்தான்.

பஞ்சாயத்து ஆட்சியில் கிராமங்கள் வாழ்ந்தாலும் நாட்டின் பொது நிர்வாகத்திற்கு ஒரு சர்க்கார் இருப்பது அவசியம். அந்த சர்க்கார் பாஷாவாரியாக மாகாணங்களைப் பிரிப்பதுடன், மாகாண தலைநகரங்களின் தேவைக்காக கிராமங்களிலிருந்து விளைபொருளாகவே வரி வசூலித்து நகரவாசிகளின் உணவுத் தேவைகளை சமாளிக்க வேண்டும்.

கிராம சுபிக்ஷத்திற்கும் நிர்வாகத்திற்கும் பங்கம் வராது சர்க்கார் சட்டமியற்றி நகர நிர்வாகத்தை நடத்துவதுடன் பெரிய கைத்தொழில்களை நகரங்களில் சர்க்காரின் சார்பாக ஸ்தாபனம் செய்து நிர்வகிக்க வேண்டும். கிராமக் கைத் தொழிலால் சாத்யமில்லாத பொருள் உற்பத்தியில்தான் பெரிய யந்திர சாதனத் தொழிற்சாலைகள் ஏற்படவேண்டுமே யன்றி கிராமத் தொழில்களுடன் போட்டியிட்டு நசுக்கும் முறையில் அவை அமையக்கூடாது. நவீன வசதிக்கேற்ப தொழில் அபிவிருத்தியும் விஞ்ஞான வசதியுமேற்பட திட்டம் போட்டு சர்க்கார் வேலை செய்யவேண்டும்.

காடு, ரஸ்தா, நீர்ப்பாசனம், கனிச்சுரங்கங்கள், ரெயில்வே, கப்பல் போக்குவரத்து, தந்தி தபால் முதலிய ஜீவாதாரமான தொழில்களை சர்க்காரே நிர்வகிக்கவேண்டும். தற்காப்புப் படை சர்வ கலாசாலை, ஆராய்ச்சி கூடங்கள் முதலிய பொது ஸ்தாபனங்களை சர்க்காரே நடத்துவதுடன் கிராம மக்கள் கலந்து கொள்ளப் போதுமான வசதியும் ஏற்படுத்தித் தரவேண்டும்.

கிராம சபைகளின் ஆலோசனையின்மீது கிராமங்களிலிருந்து ஆள் பலமும் பொருள் பலமும் பெற்று சர்க்கார் மேலே கூறிய தேசிய ஆக்க வேலைகளில் ஈடுபடவேண்டும்.

## செலாவணி:

கிராமங்கள் பரஸ்பரம் வியாபாரம் செய்து கொள்ளத்தான் பண்டமாற்றுமுறை சிறந்ததே தவிர வியாபார விஸ்தாரத்திற்கு அந்த முறை உகந்ததல்ல. பரந்த பாரத நாட்டில் ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்கு ஏற்றுமதி செய்ய ஒரு நாணயச் செலவாணி வேண்டியது அவசியம்தான். ஆனால் அது விவசாயியையும் வியாபாரியையும் விழுங்கிவிடும் வண்ணம் விஸ்வரூபம் எடுக்காது கட்டுப்படுத்தி வைக்க வேண்டும். கிராம சபைகள் மத்ய சர்க்காருக்கும் கொடுக்கும் வரியை தானியமாகக் கொடுக்கும்படிச் செய்தால் அது நகரங்களின் உணவுத்

தேவையை சமாளிக்க உதவுவதுடன் சர்க்கார் சிப்பந்திகளின் உணவுத் தேவையையும் ஓரளவு சமாளிக்கும்.

மாகாணம் விட்டு மாகாணம் நடக்கும் வியாபாரத்திற்காக குறிப்பிட்ட அளவு நிர்ணயத்தை க்ஜானு மூலமாக சர்க்கார் வெளியிடலாம்.

## ஸ்திரீகளின் அந்தஸ்து

குடும்பம் சீராக இருந்தால்தான் கிராமத்திலும் சிறந்த பிரஜைகள் வாழமுடியும். பெண்கள் கல்வி அறிவு பெற்று நாட்டின் முன்னேற்றத்தில் தங்களுடைய பங்கும் கடமையும் உணர்ந்து பாடுபட்டால் சமுதாயத்தில் அற்புதமான மாறுதல்கள் ஏற்பட்டுவிடும்.

சொத்து உரிமையிலும் சமூக அந்தஸ்திலும் ஆணுக்கு நிகராக பெண் வாழவேண்டும். சம்பிரதாயங்களிலும் வாழ்க்கை முறையிலும் மதத்திற்கு மதமும், ஜாதிக்கு ஜாதியும் வித்யாசமான முரண்பாடுகளிருப்பதால் அந்த அந்த சமூகத்திலுள்ள பிரமுகர்கள் சமயத்திற்கேற்றவாறு செய்யும் சீர்திருத்தங்களை அரசியல் அமைப்பு ஏற்றுக் கொள்வதுதான் உசிதம். சமூக சீர்திருத்தத்தில் சர்க்கார் தலையிடுவதைவிட சமூகசீர்திருத்தக்காரர்களின் உழைப்பும் தீர்ப்பும்தான் சிறந்தது. ஆனால் கல்வி முறையிலும் பிரஜா உரிமையிலும் எல்லா சமூகப் பெண்களும் ஒரே விதமானப் பயிற்சி பெற்று சிறந்த பிரஜைகளாக வாழ வேண்டும் என்பதும் அவசியம்.

## உலக சமாதானம்

சமூகத்தின் அடிப்படை அமைப்பான கிராமங்களைப் பற்றியும், நகரங்களின் அமைப்பையும் பற்றி விவரித்தோம். இனி மனித சமூகத்தைப் பிணைக்கும் சர்வ தேச அரசியலைப் பற்றியும் சிறிது ஆராய்வோம்.

ரேடியோவும் ஆகாய விமானமும் வந்துள்ள இந்நாளில் காலத்தையும் தூரத்தையும் வென்று விஞ்ஞானம் செய்யும் அற்புதங்கள் நிறைந்த இந்தக் காலத்தில் கிராமங்களோ, சமுதாயமோ; தேசமோ தனித்து வாழ்வது என்பது இனி முடியாத காரியம். இன்று இங்கிலாந்து நமது 'கொல்லைத் தலைமாடு' போல் ஆகிவிட்டது. விஞ்ஞான வளர்ச்சியினால் இங்கிலாந்து முழுவதும் ஒரு சிறு கிராமமாக சுருங்கிக் காட்சியளிக்கிறது.

ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருக்கும் அமெரிக்கா ஐந்து நாட் பிரயாணத்தில் நெருங்கிவிட்டது. உலகம் முழுவதும் ஒரே சமுதாயமாக வாழ்ந்தால்தான் சர்வதேச சமாதானமும் அமைதியும் ஏற்படும் என்ற காலம் வந்து விட்டது.

யுத்தத்தின் மாற்று சமாதானம்தான். வேரோடு கெல்லி எறிந்தால் ஒழிய யுத்த வெறி அடங்காது. ஆக்ரமிப்பு ஆசை, ஏகாதிபத்திய வெறி, சர்வதேச மார்க்கட்டைக் கட்டியாளும் எண்ணம், எல்லா போகங்களையும் ஏகபோக உரிமையாக அனுபவிக்க வேண்டுமென்ற பேரவா, பொருளாதிக்க ஆதிக்கம், இவைதான் மக்களுக்கு வெறியூட்டி யுத்தத்தை மூட்டும் கொள்ளிகள்.

சாணிக்காக நடுத்தெருவில் சண்டையிட்டு கும்பல் கூட்டும் கிராமப் பெண்களுக்கும் எண்ணெய்க்காக, எதிரெதிர் நின்று பீரங்கிகளைத் தூக்கும் ஹிட்லருக்கும் சர்ச்சிலுக்கும் தத்துவத்தில் வித்யாசமேயில்லை. சாணிச்சண்டை தெருவுடன் நின்றுவிடும். அதில் நாசவேலையில்லை. எண்ணெய்ச் சண்டை எதிர்த்தவர் எல்லோரையும் பாதிக்கும். எண்ணற்ற மக்களைப் பலிகொண்டு குடும்ப விளக்கை அணைத்துவிடும். பேராசையின் மீது எழுந்த இந்த வெறிக்கு உலக யுத்தம் என்ற பிரமாதமான பெயர்! இதற்கு ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளும் அறிஞர்களும் சேவை செய்கிறார்கள். அடங்கிக் கிடக்கும் தாமஸ குணம், மனத்தில் திடீரெனச் சீறி எழுந்து பேராசையைக் கிளப்பிவிடுகிறது. சக்திக் கேற்றபடி அதன் பாய்ச்சல் பரவி கொடுமையைப் பரப்புகிறது. மனத்தைக் கட்டுப்படுத்தி விட்டால் நாசத்தையும் கட்டுப்படுத்திவிட முடியும். ஆதிக்க வெறியும் பிறரை அடக்கி ஆளும் ஆசையையும் கட்டுப்படுத்தி விட்டால் யுத்தம் தலை தூக்கவே இடமிராது. மக்களின் மனத்தில் மாறுதலின்றி எத்தனை வல்லரசுகள் ஒன்று சேர்ந்தால்கூட சர்வதேச சமாதானம் காண முடியாது. வல்லரசுகளே ஆதிக்க வெறி கொண்டுதானே படை பலத்தை விஸ்தரித்துக் கொண்டன?

சிறு சம்பவத்தைக் காரணமாகக் கொண்டு வல்லரசுகள் அடுத்துள்ள சிறு நாடுகள் மீது பாய்ந்து அடிமைப் படுத்திக் கொள்ள முடியுமல்லவா? வல்லரசின் வளர்ச்சியைக் கண்டு சிறு நாடுகள் பயந்து கொண்டிருக்கும்வரை நிரந்தர சமாதானம் எங்கிருந்து வரும்?

ஒற்றுமையின் பேரால் ஒன்று கூடும் வல்லரசுகளும் பரஸ்பரம் சம்சயம் கொண்டவைதான். கொள்ளையடிக்கு மட்டும் திருடர்கள் ஒற்றுமையாகத்தான் இருப்பார்கள். கொள்ளையடித்த சொத்தைப் பங்கிட்டுக்கொள்ளும் போதுதான் வம்பும் வழக்கும் வரும். அதே போலத்தான் வல்லரசுகளின் ஒற்றுமையும். சர்வதேச அரசியலில் இன்று வெற்றியடைந்தவன் நாளை வீழ்ச்சியுற்று யுத்தக் கைதியாகி விடுவான். இன்று ஆதர்ச புருஷனாகத் தோன்றிய தலைவன் நாளை நாட்டைக் காட்டிக்கொடுத்த துரோகி என்று பெயர் வாங்கி விடுவான். பிரான்ஸிற்காகப் பாடுபட்ட ஜெனரல் டிகாலேயும் மார்ஷல் பெட்டைனும் இன்று அரசியல் வானிலிருந்து அஸ்தமனமாகிவிட்டனர். யுத்த வெறி ஒரு மாயச்சுழல். ஹிட்லர் செய்த குற்றத்தைத்தான் சர்ச்சிலும் செய்தான். ஆனால் ஹிட்லரின் கதி வேறுவிதமாக நிர்ணயிக்கப்பட்டது. ஆதிபத்ய ஆசையுடன் யுத்தத்திலிறங்கிய குற்றத்திற்கு ஹிட்லரைத் தண்டிக்க வேண்டியது நியாய மென்றால் ஜர்மன் நாட்டின் மீது போர் முரசு கொட்டிய ரூஸ்வெல்டும் அதே குற்றத்துக்கு ஆளான பேர்வழிதான். பொய்க் கையெழுத்திட்டு பிரிட்டிஷ் ஆட்சியை இங்கு ஸ்தாபித்த கிளைவ் முதல் துரோகி. வெல்லஸ்லி, ஏகாதிபத்திய வெறியன் டல்ஹௌஸி, திமிர் பிடித்த சர்ச்சில் உள்பட பிரிட்டிஷ் சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற அரசியல் மேதைகள் எல்லோரும் இந்தியாவில் நடத்திய அட்டூழியங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டு சுட்டுக் கொல்லத் தகுந்தவர்கள்தான். மிருகத்தனமாகவும் கேவலமாகவும் நடந்து இந்தியாவைச் சுரண்டி அடிமையாக்கி வெற்றி கண்ட அவர்கள் கைதிகளிலும் கேவலமான கைதிகள். ஆனால் ராஜநீதியில் அவர்களுக்கு வெற்றி வீரர்கள் என்ற கௌரவம். வெற்றியும் தோல்வியும் மாயத்தோற்றம்தான். யுத்தத் துரோகி என்பதும் விஷ வீச்சுத்தான். மனிதரிடையே பிளவும் குரோதமும் ஏற்படுத்தி மனத்தில் ஆறாத துவேஷத்தை எழுப்பும் சொற்கள் இவை. யுத்தத்தில் வெற்றியடைந்தவர்கள் களியாட்டம் கொள்வார்கள். ஆனால் தன் நாட்டிலும் படையெடுத்த நாட்டிலும் நரகத்தை சிருஷ்டித்து விட்டோமே என்பதை இவர்கள் சிந்தித்துப் பார்க்க முடியாது; பார்க்கமாட்டார்கள். யுத்தம் முடிந்துவிட்டது, நாம் வெற்றி கண்டோம் என்று ஆர்ப்பாட்டமும் ஆரவாரமும் செய்வதற்கில்லை. தோல்வியடைந்

தவன் மனத்தில் துவேஷமும் வெறுப்பும் ஊறிக் கிடக்கிறது. அதில் அடுத்தயுத்தத்தின் விதைகளும் இருக்கின்றன. நாகரிக மக்கள் இந்தக் கொரேத்தைக் கண்டிக்கவேண்டும். இந்தக் காட்டு மிராண்டித்தனமும் பேயாசையும் ஒழியப் பாடுபட வேண்டும்.

ஆனால் நாகரிக மக்கள் என்பவர் யார்? யுத்தத்தில் ஜயித்தவர்களா? அவர்கள் தான் தோல்வி யடைந்தவர்களை அநாகரிகர்கள் என்றும் தாம்தான் நாகரிகப் பண்புடையவர் கள் என்றும் பறைசாற்றிவருகிறார்கள். உண்மை அது இல்லை. வெற்றி யடைந்தவர்கள் மிருக குணம் கொண்ட காட்டு மிராண் டிகள். அவர்களுடைய பேராசையினால் நாகரிகம் கொலையுண்டு மாய்ந்து விட்டது.

மிருக பலமும், ஆக்ரமிப்பு ஆவேசமும், ஏகாதிபத்திய வெறியும் நாகரிகமல்ல. மடிப்புக் கலையாத வெள்ளைச் சட்டை போட்டுக் கொள்வதும் மழமழப்பாக முகக்ஷவரம் செய்வதும் நாகரிகத்தின் சின்னங்களல்ல. நாகரிகத்தின் வியாக்யானத் தையே நாம் மாற்றவேண்டும். அன்பும் அருளும் கொண்ட அஹிம்ஸை வழியில் சத்யத்தையும் நேர்மையையும் கொண்ட பண்புதான் நாகரிகம். சமூகத்தின் பண்பாட்டையும் தேசத் தின் கலாசாரத்தையும் வெளிப்படுத்தும் நாகரிகம் இந்த அடிப் படையில்தான் அமையவேண்டும். இந்த வியாக்யானப்படி இன்று மேனாட்டினரைப் பார்த்தால் அவர்கள் எல்லோரும் மனிதத் தன்மையற்ற, மிருகவெறிகொண்ட, அநாகரிகக் காட்டு மிராண்டிகள் என்றுதான் சொல்லவேண்டும். அஹிம்ஸா மூர்த்தி காந்தியடிகளின் ஆணை யேற்று நடக்கும் அகில இந்திய காங்கிரஸும், பாரத வாசிகளும் தான் நாகரிகமான மக்கள், மனிதத் தன்மையுள்ளவர்கள். யுத்தக் குற்றவாளிகள் என்று பிறரைக் குற்றம் சாட்டும் உரிமை பாரத வாசிகளுக்கு மட்டும் தான் உண்டு. அவர்களை விசாரிப்பதுடன், உலகிலே ஒரு புது வழி காட்டி யுத்தத்தின் தீமையை அழித்து நிரந்தர சமா தானத்திற்கு அடிகோலும் ஆற்றலும் பாரத நாட்டிற்குத்தான் உண்டு.

---

## வேஷம் வேண்டாம்

"இதுவரையில் காங்கிரஸ்காரர்கள் கதர் விஷயத்தில் விளையாட்டுத்தனமாக நடந்துகொண்டு வந்திருக்கின்றனர். அதன் மகத்துவத்தை அவர்கள் நம்பவில்லை. வெளி வேஷத்திற்காக மாத்திரம் அவர்கள் வேண்டாவெறுப்புடன் கதரை அணிந்து வந்திருக்கின்றனர். நம்மிடையே உண்மையான அஹிம்சை பரிமளிக்க வேண்டுமானால் கதரணிவதும் உண்மையானதாக வேண்டும்."

—மகாத்மா காந்தி.

## ஏழ்மை போகாவிடில்?

"இந்தியாவில் கிராமங்கள் தோறும் போய் இந்திய கிராமவாசிகள் அனுபவிக்கும் ஏழ்மையைப் பார்த்தால் நெஞ்சம் பதறுகிறது. நமது விவசாயிகளின் ஏழ்மைத் தனத்தை எப்படிப் போக்கப் போகிறோம்? அதுவும் சீக்கிரத்தில் போக்குவது எப்படி? இதுதான் நாம் தீர்க்கவேண்டிய முதல் பிரச்னை. மற்றவைகளெல்லாம் அதற்குப் பின்னால் ஆலோசிக்கப்பட வேண்டியவைகளே. இந்த ஏழ்மைத் தனத்தை நமது சுதந்திரம் ஒழிக்காது போகுமானால், அத்தகைய சுதந்திரம் நாசமாகப் போகட்டும்."

—பண்டித ஜவாஹர்லால் நேரு.

## வாய் வேதாந்தம் போதாது

"வலுத்துக் கொழுத்த சரீரமுடையவன். இளைத்த ஏழையின் தோள்மீது அவன் ஏறி உட்கார்ந்து கொண்டு விட்டான். படித்தவர்களும் பணக்காரர்களுமாகிய நாம் சமூகத்தில் பெற்றிருக்கும் நிலைமை இதுதான். ஏழைகளுக்கு இரங்குகிறோம். அதிக வருத்தங்கூடத் தெரிவிக்கிறோம். கால்கள் துவண்டு அவன் விழுந்துவிடாதபடி பார்த்துக் கொள்ளுவதற்குப் போதுமான அளவிற்கு அவனுக்குச் சோறும் போடுகிறோம். இயற்கையின் அழகையும் அவனுக்கு வர்ணிக்கிறோம், சங்கீதத்தின் இனிமையையும் எடுத்துச் சொல்லுகிறோம். அது மாத்திரமல்ல. அவனுக்கு வண்டி வண்டியாக புத்திமதிகளையுங்கூட தாராளமாகச் சொல்லுகிறோம்.

"ஆம், ஏழைகளுக்காக எதை வேண்டுமானாலும் செய்வோம். ஆனால் அவன் தோளைவிட்டு மாத்திரம் இறங்க மாட்டோம்."

—டால்ஸ்டாய்.

Printed at Jothi Press, Triplicane, Madras.



## ஐயோவென்று போவான்

குடு குடு குடு குடு குடு குடு குடு குடு;
நல்ல காலம் வருகுது; நல்ல காலம் வருகுது;
சாதிகள் சேருது; சண்டைகள் தொலையுது;
சொல்லடி, சொல்லடி, சக்தி, மகாளி!
வேதாபுரத்தாருக்கு நல்லகுறி சொல்லு.
தரித்திரம் போகுது; செல்வம் வருகுது'
படிப்பு வளருது; பாவம் தொலையுது;
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்,
போவான், போவான். ஐயோவென்று போவான்.

---

ஜய பேரிகை கொட்டடா — கொட்டடா
ஜய பேரிகை கொட்டடா!

1. பயமெனும் பேய்தனை யடித்தோம்—பொய்மைப்
பாம்பைப் பிளந் துயிரைக் குடித்தோம். (ஜய)
2. நோக்கும் திசை எல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்க களியாட்டம் (ஜய)

—பாரதியார்.

WRAPPER PRINTED AT JOTHI PRESS, TRIPLICANE,
MADRAS. Q. H. M. S. NO. 389-46.